**கவனிக்க.-** (i) *2018.03.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*
(ii) இந்த வர்த்தமானியின் பகுதி vi இல் 2017.12.31 ஆந் திகதி வரை பதிவு செய்யப்பட்டுள்ள மிருக வைத்தியர்களின் பெயர்ப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2062 - 2018 මාර්තු මස 09 වැනි සිකුරාදා - 2018.03.09

*2062 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 400 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 419 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2018, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2018, மாச்சு மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மாகாண சபை அறிவித்தல்கள்

எனது இல. NWP/ MORD/ AD/ 7/ 7/ 3-1

### வடமேல் மாகாணத்தின் மாகாண சபை

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ................. இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபை சாசனம்.

இங்கு கீழ் பிரசுரிக்கப்படுகின்ற வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் .......... இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபை சாசனம் இத் தினம் தொடக்கம் முப்பது நாட்கள் காலாவதியானதையடுத்து வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்குச் சமர்ப்பிப்பது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன். எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவதொரு விடயம் காணப்பட்டால் அதனை அத் தினத்திற்கு முன் என்னிடத்தில் சமர்ப்பிக்கவும்.

குணதாச தெஹிகம,
வீதி, போக்குவரத்து, வீடமைப்பு, தொழில் மற்றும்
கிராம அபிவிருத்தி மாகாண அமைச்சு (வடமேல் மாகாணம்)

வீதி, போக்குவரத்து, வீடமைப்பு, தொழில் மற்றும்
கிராம அபிவிருத்தி மாகாண அமைச்சு - வடமேல் மாகாணம்
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
அடித்தளம்- குருநாகல்.

### வடமேல் மாகாணத்தின் தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபை முன்மொழியப்பட்ட சாசன வரைவு

வடமேல் மாகாணத்தினுள் மோட்டார் வாகனத்தினால், பாதைகளின் ஊடாக போக்குவரத்துச் சேவை மற்றும் /அல்லது வணிக போக்குவரத்துச் சேவையினை முறைப்படுத்துவதற்காகவும், தெருப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் வடமேல் மாகாணத்திற்கு உரியதான அளவிற்கு வடமேல் மாகாணம் தொடர்பான மாகாண போக்குவரத்துச் சேவைகளை முறைப்படுத்துவதற்காகவும், அதனை முறைப்படுத்தும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு வடமேல் மாகாணத்திற்காக போக்குவரத்துச் சேவை அதிகார சபை ஒன்றினை அமைப்பதற்காகவும், அது பற்றி அல்லது அதற்கு இணையான விடயங்களுக்கான விதிகளை ஏற்படுத்தல் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் சாசனத்தினை இரத்துச் செய்வதற்கான சாசனமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர்

1. இச் சாசனம் வடமேல் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ............... ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபை சாசனம் என்று அறிமுகப்படுத்தப்படும்.

செயற்படுத்தப் படும் திகதி

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற திகதியில் இருந்து வடமேல் ஆளுநரினால் அனுமதிக்கப்படுகின்ற (இங்கு இதற்குப் பிறகு 'குறிப்பிட்ட திகதி' என்று குறிப் பிடப்படுகின்ற) திகதியில் இருந்து இச் சாசனம் செயற்படுத்தப்படும்.

### I ஆம் பகுதி

வடமேல் மாகாணத்தின் தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபை

தெருப் போக்கு வரத்துச் சேவை யினை ஏற்படுத் தல்.

3. 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் தெருப் பயணிகள் போக்குவரத்துச் சேவை சாசனத்தினை இத்துடன் இரத்துச் செய்யப்படும்.

4. (i) இங்கு இதற்குப் பிறகு அதிகார சபை என்று அறிமுகப்படுத்தப்படுகின்ற 'வடமேல் மாகாண தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபை ஒன்று' ஏற்படுத்தப்படும்.

(ii) மேலே 4(1) உப பிரிவினால் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பெயரில் அது தொடர்ச்சியாக இருப்புள்ளதும் பொது முத்திரையுடன் வழக்கு தொடர்வதற்கும் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் அதிகாரமுள்ள அமைப்புடைய நிறுவனமாக அமைதல் வேண்டும்.

5. (i) மாகாண அதிகார சபையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 7 உறுப்பினர்களைக் கொண்டு உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். *அதிகார சபையின் உறுப்பினர்கள்*

(ii) (அ) அமைச்சர் அவர்களின் அனுமதியுடன் பதவி அதிகாரத்தினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

(i) வடமேல் மாகாணப் போக்குவரத்து விடய பொறுப்புடைய அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நிர்வாக நிலையில் உள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்,

(ii) வடமேல் மாகாண முதலமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உரிய அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(iii) வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்புடைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு குறையாத அல்லது உயர் நிலையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர்.

(iv) போக்குவரத்து, சட்டம், முகாமைத்துவம், வர்த்தகம், நிருவாகம் அல்லது சிவில் பொறியியல் ஆகிய துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான தகைமைகளையுடையதும் அவ் விடயம் பற்றி சிறந்த அனுபவமும் திறமையையும் உடையவர் என்று விடயப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களினால் திருப்தி அடைகின்றவர்கள் 04 பேர்.

(v) அதிகார சபையின் எல்லா உறுப்பினர்களும் அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் வழங்கப்படுகின்ற கடிதம் மூலம் ஒழுங்கு முறைப்படி நியமிக்கப்பட வேண்டும். 'அவ்வாறான எல்லா நியமனங்களும் அரச வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.'

6. (i) அமைச்சர் அவர்களினால் மேலே நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையே ஒரு உறுப்பினரை அதிகார சபையின் தலைவராக நியமித்தல் வேண்டும். *அதிகார சபையின் தலைவர்*

(ii) தலைவர் அவர்களின் பதவிக் காலம் அவர் அதிகார சபையில் உறுப்புரிமைக் காலம் மற்றும் அமைச்சர் அவர்களின் திருப்திக்கு உள்ளாகும் வரை இருத்தல் வேண்டும்.

(iii) ii ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணமாக, தலைவருக்கு உரிய பதவியில் நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தவறும் சந்தர்ப்பத்தில் தலைவராக வேலைப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக வேறு உறுப்பினர் ஒருவரை அமைச்சரினால் நியமிக்க முடியும்.

7. எவர் ஒருவர், *உறுப்பினராவதற்கான தகைமையின்மை*

(i) பாராளுமன்ற மந்திரி ஒருவர், ஏதாவதொரு மாகாண சபையின் மந்திரி ஒருவர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராயின்

(ii) இலங்கைப் பிரசையாகாத சந்தர்ப்பத்தில்

(iii) ஏற்றுக் கொள்ளப்பட்ட வைத்தியக் குழுவினால் மனநோயாளி என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது முழு செயலற்ற நிலைக்கு உட்பட்டிருந்தால்

(iv) இலங்கையில் ஏதாவதொரு நீதிமன்றத்தினால் குற்றத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவராக அல்லது குற்றவாளியாயின்,

அவர் அதிகார சபையின் பணிப்பாளர் சபையில் உறுப்பினராக நியமிப்பதற்கும், நியமிக்கப் பட்டிருந்தால் தொடர்ந்து செயல்படுவதற்குத் தகைமையற்றவராவார்.

*உறுப்பினர்களின் நிதித் தொடர்பு*

8. (i) அமைச்சர் அவர்களினால் அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினராக யாராவது ஒருவரை நியமிப்பதற்கு முன் அவரினால் அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினராக தமது பொறுப்பினை நிறைவேற்றும் போது எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதற்கு இடமுள்ள அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு உரிய நிதி அல்லது வேறு தொடர்புகள் அந்த நபருக்கு இல்லை என்று அமைச்சர் திருப்தியடைதல் வேண்டும்.

(ii) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்பு அவ்வாறான ஏதாவதொரு தொடர்பு இல்லை என்பது பற்றி அமைச்சர் அவர்கள் காலத்திற்குக் காலம் திருப்தியடைய வேண்டும்.

(iii) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினராக நியமிப்பதற்கு அமைச்சரினால் முன்மொழியப்படுகின்ற ஒருவர், அமைச்சரினால் உரிய செயலுக்காக கோரிக்கை செய்யப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இச் சாசனத்தின் செயல்களுக்காக தேவை என்று அமைச்சரினால் கருதப்படுகின்ற ஏதாவதொரு தகவல்களையும் சமர்பித்தல் வேண்டும்.

(iv) அதிகார சபையினால் ஏற்படுத்தப்படுகின்ற அல்லது ஏற்படுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற ஏதாவதொரு உடன்படிக்கை பற்றி ஏதாவதொரு முறையில் நேரடியாக அல்லது மாற்று வழியிற்கு ஆர்வமுள்ள அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவரினால் தமது தொடர்பின் தன்மை பற்றி அதிகார சபையின் கூட்டத்தின் போது வெளிப்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு வெளிப்படுத்துவதனை அதிகார சபையின் கூட்ட அறிக்கைகளில் வெளிப்படுத்த வேண்டியதுடன், அவ் உடன்படிக்கை தொடர்பாக அதிகார சபையினால் நடாத்தப்படுகின்ற ஏதாவதொரு கலந்தாலோசனைக்கு அல்லது அதிகார சபையினால் எடுக்கப்படுகின்ற ஏதாவதொரு தீர்மானத்திற்கு அப் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாகாது.

*அதிகார சபையின் பணிப்பாளர் குழுக்கூட்டம்.*

9. (i) அதிகார சபையின் எல்லாப் பணிப்பாளர் குழுக் கூட்டத்தின் போதும் தலைவர் தலைமை வகித்தல் வேண்டும். தலைவர் ஏதாவதொரு கூட்டத்திற்கு வருகை தராத சந்தர்ப்பத்தில் வருகை தந்துள்ள உறுப்பினர்களினால் அவர்களுக்கிடையே எவர் ஒருவரையாவது அக் கூட்டத்திற்காக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ii) அதிகார சபையின் பணிப்பாளர் குழுக் கூட்டத்திற்குக் குறைந்தபட்சம் பெரும்பான்மை 3 பேர்களாவது இருத்தல் வேண்டும்.

(iii) அதிகார சபையினால் கருத்தில் கொள்வதற்காக சமர்பிக்கப்படுகின்ற எல்லா விடயங்களும் அதிகார சபையின் பணிப்பாளர் குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், அவ் விடயங்கள் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்கினை உபயோகப்படுத்துகின்ற பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையினரினால் அனுமதிக்கப்பட வேண்டும்.

(iv) ஏதாவதொரு பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக அல்லது நியமிப்பதற்காக ஏதாவதொரு குறைபாடு இருந்ததாக அல்லது அவ்வாறான உறுப்பினர் தகைமையற்றவர் என்று பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் அவருக்குத் தகைமை உள்ளதாகக் கருதி அவர் கலந்து கொண்ட பணிப்பாளர் குழுக் கூட்டத்தில் செய்யப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் செல்லுபடியாதல் வேண்டும்.

(v) அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்களில் ஏதாவதொரு வெற்றிடம் ஏற்பட்டதன் காரணமாகவே மாத்திரம் ஏதாவதொரு பணிப்பாளர் குழுவின் கூட்டத்தின் எவ்வித செயற்பாடும் அல்லது நடவடிக்கையும் அதிகாரமற்றதாக இருக்கக் கூடாது.

*உறுப்பினர்களின் பதவிக் காலம்*

10. உரிய காலத்திற்கு முன் பதவியினைக் கைவிட்டால் அல்லது 11 அல்லது 13 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் தவிர மாகாண அதிகார சபையின் எல்லா உறுப்பினர்களும்

தமது நியமனத் திகதி தொடக்கம் 3 ஆண்டு காலம் பதவி வகிக்கப்படுவர் என்றாலும் உறுப்புரிமையில் ஏதாவதொரு வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் பதவி வகிப்பது தமது முன்னோரின் பதவிக் காலத்தில் மீதிக் காலத்திற்காக மாத்திரமாகும்.

11. நோய் காரணமாக அல்லது இலங்கையில் இருந்து வெளியேறி இருப்பதனால் அல்லது வேறு காரணமாக அல்லது உரிய கடமையினை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு உறுப்பினர் ஒருவரையும் தற்காலிகமாக தவறும் பட்சத்தில் அக் காலத்திற்காக 5 ஆம் மற்றும் 7 ஆம் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு அமைச்சரினால் உறுப்பினராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு வேறு ஒருவரை நியமிக்க முடியும். செயலாற்றும் உறுப்பினர்களை நியமித்தல்.

12. அமைச்சரிடத்தில் உரிய செயற்பாட்டுக்காகச் செய்யப்படும் எழுத்து மூலமான அறிவித்தலினால் மாகாண அதிகார சபையின் எந்தவொரு உறுப்பினரும் எச்சந்தர்ப்பத்திலேனும் தமது பதவியில் இருந்து கேட்டு விலகிக் கொள்ளலாம். கேட்டு விலகல்.

13. அமைச்சரினால் எச்சந்தர்ப்பத்திலும் காரணம் தெரிவிக்காது எந்தவொரு உறுப்பினரையும் பதவியில் இருந்து நீக்கலாம். பதவியில் இருந்து நீக்குதல்.

14. பதவிக் காலம் முடிவடைந்த பின்பு உறுப்புரிமை இரத்தாகும் உறுப்பினரும், சுய விருப்பத்துடன் அல்லது பதவிக் காலத்தினுள் கேட்டு நீங்கிய உறுப்பினரும் மீண்டும் நியமிக்கலாம் என்றாலும் 13 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அகற்றப்பட்ட உறுப்பினர் ஒருவர் மீண்டும் நியமிப்பதற்கு தகைமையற்றவராவார். மீண்டும் நியமித்தல்.

15. மாகாண அதிகார சபையின் உறுப்பினர்களுக்கும் மற்றும் தலைவருக்கும் மாகாண அமைச்சுக் குழுவின் இணக்கத்துடன், அமைச்சரினால் தீர்மானிக்கின்ற ஊதியம் மாகாண அதிகார சபையின் நிதியத்தில் இருந்து செலுத்த முடியும். அதிகார சபையின் உறுப்பினர் களுக்காக ஊதியம்.

16. (i) மாகாண அதிகார சபையின் தலைவர் கலந்து கொள்ளும் அதிகார சபையின் எல்லாக் கூட்டத்திலும் அவர் தலைமை வகித்தல் வேண்டும். மாகாண அதிகார சபையின் ஏதாவதொரு கூட்டத்திற்கு, தலைவர் கலந்து கொள்ளாத சந்தர்ப்பத்தில் வருகை தந்துள்ள உறுப்பினர்களினால் தமக்கிடையே தேர்ந்தெடுக்கப்படும் யாராவதொரு உறுப்பினர் அத் தலைமையினை வகித்தல் வேண்டும். மாகாண அதிகார சபையின் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

(ii) பணிப்பாளர் குழு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும். கூட்டம் தேவை என்று மாகாண அதிகார சபையின் தலைவர் கருதுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அதிகார சபையின் உறுப்பினர்கள் மூவரினால் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கின்ற சந்தர்ப்பத்தில் மாகாண அதிகார சபையின் கூட்டத்தினை தலைவரினால் கூட்டப்பட முடியும்.

(iii) இச் சாசனத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய மாகாண அதிகார சபையின் கூட்டம் மற்றும் அக் கூட்டங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முறை எப்படி என்பது பற்றி ஒரு பணி வரிசைக்கு அமைய மாகாண அதிகார சபையினால் விதிகள் உருவாக்க முடியும்.

17. (i) மாகாண அதிகார சபையின் முத்திரை மாகாண அதிகார சபையின் தலைவரின் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும். மாகாண அதிகார சபையின் முத்திரை

(ii) மாகாண அதிகார சபையின் முத்திரை மாகாண அதிகார சபையினால் தீர்னிக்கப்படுகின்றவாறு திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

(iii) மாகாண அதிகார சபையின் முத்திரையினை மாகாண அதிகார சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையில் இன்றி எவ்வித ஆவணத்திற்கும் அல்லது செயல் திறன் பத்திரத்திற்கும் இடலாகாது. அவ் உறுப்பினர் இருவரில் ஒரு உறுப்பினர் மாகாண அதிகார சபையின் தலைவராக வேண்டும். தமது முன்னிலையில் முத்திரை இடப்பட்டதற்கான சாட்சியாக அவ் உறுப்பினர்கள் இருவருமே அவ் ஆவணத்திற்கு அல்லது செயல் திறன் பத்திரத்திற்கு கையொப்பமிடல் வேண்டும்.

## II ஆம் பகுதி

*மாகாண தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்*

*மாகாண அதிகார சபையின் அதிகாரமும் பணிகளும்.*

18. மாகாண தெருப் போக்குவரத்துச் சேவை அதிகார சபைக்குக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமும் பணிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

*பயணிகள் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான சேவை பற்றிய அதிகாரம்*

(i) வடமேல் மாகாணத்தினுள் பொது மக்களின் பயணங்களுக்கு உகந்த நல்ல தரத்தினை உடைய பேரூந்து சேவை காணப்படுகின்றதா என்பது பற்றி தேடிப்பார்த்தல் மற்றும் கால அட்டவணையினைத் தயாரித்தல் மற்றும் இயக்கிகள் அக் கால அட்டவணையினை பின் பற்றுதல் பற்றி உறுதிப்பத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வடமேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்திற்காக பேரூந்துகளை ஈடுபடுத்த வேண்டிய வழிகளை அனுமதித்தல், வகைப்படுத்தல் மற்றும் பேரூந்து வழிகளில் தரிப்பிடங்களை அமைத்தல் என்பவற்றைத் தீர்மானித்தல்.

*பயணிகள் மற்றும் பொருட் களைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல்.*

(ii) (அ) மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, பேரூந்துகளை உபயோகிப்பதற்கு அதிகாரம் வழங்கும் பயணிகள் சேவை உரிமப்பத்திரம் வழங்குதல், அந்த அனுமதிப் பத்திரத்தினை புதுப்பித்தல் அல்லது திருத்தம் செய்தல், இரத்துச் செய்தல் மற்றும் காலத்தினை நீடித்தல் மற்றும் உரிமையினை முறைப்படுத்தல், அந்த அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்காக கட்டணம் விதித்தல்.

(ஆ) பயணிகளுக்கு போக்குவரத்துக்காக பேரூந்துக்களை உபயோகிப்பதற்கு அனுமதியினை வழங்கும் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது ஏதாவதொரு விதிகளுக்கு உட்பட்டதாயின் அவ் விதிகளைப் பின்பற்றுவது பற்றி உறுதி செய்து கொள்வதும் அவற்றை செயற்படுத்துதலும்.

(இ) மாகாணத்தினுள் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்தல், முறைப்படுத்தல் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லும் சேவையினை முறைப்படுத்தலுக்காக அதிகார சபையினால் படிவம் ஒன்றினை வழங்குதல், புதுப்பித்தல், திருத்தம் செய்தல், இரத்துச் செய்தல், காலத்தினை நீடித்தல் மற்றும் உரிமையினை முறைப்படுத்தல், அவ் அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்காக கட்டணம் விதித்தல்.

*பயணிகள் மற்றும் பொருட் களைக் கொண்டு செல்வதற்காக ஈடுபடுத்தப்படும் வாகனங்களின் பொருத்தம்.*

(iii) மாகாணத்தினுள் பயணிகள் மற்றும் /அல்லது போக்குவரத்துச் சேவை அனுமதியாளரினால் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் அல்லது பொருட்களைக் கொண்டு செல்வதற்காக உபயோகப்படுத்துகின்ற மோட்டார் வண்டியின் அனுமதியாளரினால் கொண்டு நடாத்திச் செல்ல வேண்டிய மற்றும் பொருத்தம் பற்றி வேறு சட்டத்தினால் விதிக்கப்படாத பயணிகள் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு அத்தியவசியமான தர நிலையினை அமைச்சரிடத்தில் பரிந்துரைத்தல்.

*தகவல்களை வழங்குதல்.*

(iv) இச் சாசனத்தின் கீழ் ஏதாவதொரு நோக்கத்திற்காகத் தேவையான தகவல்கள் மற்றும் அறிக்கை அதிகார சபையிடத்தில் வழங்குமாறு இச் சாசனத்தின் கீழ் அல்லது எழுத்து மூலமான சட்டம் ஒன்றின் கீழேனும் பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டுள்ள ஒருவருக்கு அல்லது பொருட்களைக் கொண்டு செல்வதற்கான சேவையினை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவருக்கு விதித்தல்.

*பாடசாலை மாணவர்களைக் கொண்டு செல்லுதல்.*

(v) மாகாணத்தினுள் கட்டணத்தினை பிரதிபலனாகக் கொண்டு அல்லது பரிசு பெறுவதற்காகப் பாடசாலை, பல்கலைக்கழக மற்றும் வேறு கல்வி நிறுவனங்களின் மாணவர்களைக் கொண்டு செல்வதற்காக உரிமப் பத்திரம் வழங்குதல் மற்றும் திருத்தம் செய்தல், இரத்துச் செய்தல் மற்றும்

காலத்தினை நீடித்தல், உரிமையினை முறைப்படுத்தல், சலுகைக் கட்டணம் மூலம் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.

(vi) மாகாணத்தினுள் கட்டணத்தினை பிரதிபலனாகக் கொண்டு அல்லது பரிசிற்காக பேரூந்துகளில் அல்லது வேனில் போக்குவரத்து செய்கின்ற அலுவலக சேவையாளர்கள் மற்றும் கைத்தொழில் பேட்டை சேவையாளர்கள் போக்குவரத்துச் செய்யும் சேவையினை முறைப்படுத்தல் உரிய பயணிகளுக்கான சேவையினைக் கொண்டு நடாத்தலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல், திருத்தம் செய்தல், இரத்துச் செய்தல் மற்றும் காலத்தினை நீடித்தல், உரிமையினை முறைப்படுத்தல், அவ் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காகக் கட்டணம் விதித்தல். அலுவலக சேவை மற்றும் கைத்தொழில் பேட்டை சேவை யாளர்கள் பயணித்தல்.

(vii) மாகாணத்தினுள் கட்டணம் அறவிட்டு, பிரதிபலனுடன் அல்லது கட்டணம் அறவிடாது முச்சக்கர வண்டி (ரைசிக்கல்) களில் அல்லது வாடகை வண்டிகளில் செய்யப்படும் பயணிகளின் போக்குவரத்துச் சேவையினை முறைப்படுத்துவதற்காக உரிய பயணிகளின் போக்குவரத்துச் சேவையினைக் கொண்டு நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல், திருத்தம் செய்தல், இரத்துச் செய்தல் மற்றும் காலத்தினை நீடித்தல், உரிமையினை முறைப்படுத்தல், அவ் அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்காகக் கட்டணம் விதித்தல். முச்சக்கர வண்டி (ரைசிக்கல்) மற்றும் வாடகை வண்டிகளில் பயணிகள் போக்குவரத்துச் செய்தல்.

(viii) வேறு மாகாணத்தினால் வடமேல் மாகாணத்திற்கு பிரவேசிக்கின்ற, வடமேல் அல்லது மாகாணத்தினுள் அல்லது வடமேல் மாகாணத்தினூடாகக் கட்டணம், பரிசு, பிரதிபலன் அல்லது வெவ்வேறு கட்டணம் மூலம் பயணம் செய்தல் அல்லது பொருட்களைக் கொண்டு செல்வதற்காக ஈடுபடுத்துகின்ற மோட்டார் வாகனங்களினால் சேவைக் கட்டணம் அறவிடல், நிருவகித்தல் மற்றும் முறைப்படுத்தல். மாகாணங்களுக் கிடையில் போக்குவரத்துச் சேவை.

(ix) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது வேறு நிறுவனங்களினால் உரிமப் பத்திரம் வழங்குதல் பற்றி பரிந்துரைக் கோரிக்கைவிடுக்கின்ற சந்தர்ப்பத்தில், பொருத்தமான வகையில் பரிந்துரை வழங்குதல் மற்றும் இந்த அதிகார சபையின் பரிந்துரை இன்றி வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தினால் போக்குவரத்துச் செய்கின்ற பேரூந்துகளுக்கு நுழைவு அனுமதி வழங்காததும் அது போல சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளலும்.

(x) வடமேல் மாகாணத்தினுள் பயணிகளின் போக்குவரத்துச் சேவையின் வளர்ச்சி மற்றும் தரத்தினையும் மேம்படுத்துவதற்காக பயணிகளுக்குப் போன்று முதலீட்டாளர்களின் அபிவிருத்தியிற்காக புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் மற்றும் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் செயலாளரின் இணக்கத்துடன் மற்றும் பணிப்பாளர் குழுவின் அனுமதியுடன் இதற்காக துணைக் குழுக்களை நிறுவுதல். புதிய திட்டங் களை அறிமுகப் படுத்தல்.

(xi) மாகாணத்தினுள் எல்லா பொதுப் பயணத் தேவைகளை வழங்கும் பேரூந்து போக்குவரத்துக்காக பொது, ஒருங்கிணைந்த அல்லது அதிகார சபையினால் பொருத்தமானது என்று தீர்மானிக்கின்ற, அறிவியல் நேர அட்டவணைகளை விதித்தல், அந் நேர அட்டவணைப்படி போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று எல்லா இயக்கிகளுக்கும் விதித்தல் மற்றும் அதனை மீறுகின்றவர்கள் பற்றி இருப்பிட சேவைக் கட்டணம் விதித்தல் மற்றும் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளல். நேர அட்ட வணையினை அமைத்தல்.

(xii) அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள உரிமம் பெறுபவர் பேரூந்தினுள் மற்றும் வெளியில் பயண ஆரம்பத்தினையும் முடிவினையும் மும் மொழியிலும் பெயர்ப் பலகையில் குறிப்பிடல் வேண்டும். பேரூந்து செல்லு மிடங்களை பெயர்ப் பலகையில்.

(xiii) அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற உரிமப் பத்திரம் அல்லது வேறு உரிமப் பத்திரத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து அல்லது பொருட்களைக் கொண்டு செல்கின்ற மோட்டார் வாகனங்களின் சாரதிகள் நடத்துநர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களைப் பதிவு செய்தல் அடையாள அட்டைகளை விநியோகித்தல், கட்டணம் அறவிடல் மற்றும் பதிவு செய்யப்பட்ட சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களைப் பதிவு செய்யப்பட்டதனை இரத்துச் செய்தல், புதுப்பித்தல், இடைநிறுத்துதல். சாரதிகள் நடத்துநர் சாரதி உதவியாளர் பதிவு செய்தல்

அவசரக் பரிசீலனை குழு மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லுதல்

(xiv) மாகாணத்தினுள் பயணிகள் அல்லது பொருட்களைக் கொண்டு செல்வது பற்றிய இச் சாசனத்தின் கீழ் குற்றம் செய்யப்படும் செயற்பாட்டினைத் தேடுதல், தடுத்தல் மற்றும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதனை நோக்காகக் கொண்டு அவசர பரிசீலனைக் குழுவினை நிறுவுதல் அல்லது நிறுவுமாறு ஊக்குவித்தல் அல்லது உரிய குழுக்களின் அதிகாரம் மற்றும் பணிகளை விதித்தல்.

வாடகை மோட்டார் வாகனம் மற்றும் பொருட்களைக் கொண்டு செல் கின்ற வாகனங் களை நிறுத்தும் இடங்கள்

(xv) வாடகை மோட்டார் வாகனம் அல்லது பொருட்களைக் கொண்டு செல்கின்ற வாகனங்களை நிறுத்திவைக்கும் இடங்களை நிறுவுதல் முகாமைத்துவ, அபிவிருத்தி செய்தல், வேறுபடுத்தல், மூடிவிடுதல் மற்றும் சட்டரீதியாகக் கைப்பற்றுதல்.

பயணிகள் போக்குவரத்துச் சேவை வழிகளை அறிமுகம் செய்து கொள்ளல் மற்றும் அவற்றில் போக்குவரத்துச் செய்யக்கூடிய மோட்டார் வாகனத்தினை வரிசைப்படுத்தல்.

(xvi) மாகாணத்தினுள் வெவ்வேறு கட்டணத்தினால் போக்குவரத்துச் சேவைகளைக் கொண்டு நடாத்திச் செல்லக்கூடிய வழிகளை அறிமுகம் செய்து கொள்ளல், வகைப்படுத்தல் மற்றும் உரிய ஒவ்வொரு வழிகளில் மற்றும் பயணிகள் போக்குவரத்து அல்லது பொருட்களைக் கொண்டு செல்லும் சேவை நடவடிக்கைக்காக உபயோகிக்க வேண்டிய பேரூந்து மற்றும் வேறு மோட்டார் வாகனங்களின் நிலையினை வரிசைப்படுத்தல்.

ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கை.

(xvii) அதிகார சபையின் குறிக்கோள்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வேறு சில சட்டங்களது விதிகளுக்கு உற்பட்டு இலங்கையினுள் அல்லது இலங்கையின் வெளியில் யாராவது ஒருவருடன் அல்லது நிறுவனத்துடன் ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைகளுக்கு அணுகுமுறை மற்றும் அதன் குறிக்கோள் மற்றும் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்.

நன்கொடைகள்.

(xviii) நிதிசார்பாக அல்லது பொருளுதவி அல்லது வேறு வகையில்அல்லது கொடைகள், நன்கொடைகள், உதவி அல்லது மானியங்கள் வழங்குதல் மற்றும் இச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகார சபையின் இலக்குகளுடன் அவற்றைப் பயன்படுத்துதல்.

சாரதிகள் நடத்துநர்களை சாரதி உதவி யாளர்களைப் பயிற்றுவித்தல்.

(xvi) சாரதிகள் நடத்துநர்களையும் சாரதி உதவியாளர்களையும் பயிற்றுவிப்பதற்காக சாரதிப் பயிற்சி பாடசாலையினை ஆரம்பித்தல், பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல்.

மாகாணத்தின் பேரூந்து தரிப் பிடங்களை நிருவகித்தல் மற்றும் முகா மைத்துவம் செய்தல்.

18. (i) அதிகார சபைக்கு மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்து நிறுத்துமிடங்கள் மற்றும் தெருப் போக்குவரத்து நிறுத்துமிடங்களைப் பற்றி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயற் படுத்த முடியும்.

(அ) பேரூந்துகளை நிறுத்துமிடங்கள் மற்றும் தெருப் போக்குவரத்து இடங்களை நிறுவுதல், பராமரித்தல், மூடிவிடுதல், முகாமைத்துவம், அபிவிருத்தி செய்தல், வேறுபடுத்தல், சட்ட ரீதியாகக் கைப்பற்றுதல்.

வேறு அதிகாரங் களை செயற் படுத்தல்.

(ஆ) பேரூந்து நிறுத்துமிடங்களில் பேரூந்துப் போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கை நேரசூசியினை அமைத்தலுடன் உரிய முகாமைத்துவ நடவடிக்கைக்காக தேவையான அதிகார சபையின் பணிக் குழுவினை ஈடுபடுத்தல் மற்றும் அவர்களின் அதிகாரம் பணிகள்

மற்றும் பொறுப்புக்களை விதித்தல் பற்றி வழிமுறைகளை வழங்குதல், பேரூந்து நிறுத்துமிடங்களில் அதிகார சபையின் பணிக் குழுவினால் கொண்டு நடாத்த வேண்டிய அறிக்கை மற்றும் கடிதம் ஆவணங்களும் அவற்றில் குறிக்க வேண்டிய தகவல்களை அமைத்தல்.

(இ) அதிகார சபையினால் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தினைக் கொண்டு நடாத்துகின்ற பேரூந்து நிறுத்துமிடங்களில் நிருவாகம் மற்றும் போக்குவரத்துச் சேவை நடவடிக்கைகளுக்கு வெளியாளர்கள் தொடர்புபடுத்திக் கொள்ளுவது பற்றி தீர்மானித்தல் மற்றும் அடிப்படைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம், அதிகார சபைக்கு உரியதாகும்.

(ஈ) விடயப் பொறுப்புடைய செயலாளரின் அனுமதிக்கு உற்பட்டு அதிகார சபையின் பணிகளுக்காக ஏதாவதொரு நிலையான அல்லது நிலையற்ற சொத்துக்களைக் கைப்பற்றுதல், வெளியேற்றுதல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்குதல் /எடுத்தல். சொத்துக்களைக் கைப்பற்றுதல்/ வெளியேற்றுதல்.

(எ) இச் சாசனத்தின் கீழ் அதிகார சபையின் அதிகாரப் பணிகள் மற்றும் செயல்களை உரியவாறு நிறைவேற்றல் மற்றும் நிறைவேற்றுவதற்காக தேவை என்று அதிகார சபை எண்ணுகின்ற வேறு அதிகாரங்களைச் செயற்படுத்தல். வேறு அதிகாரங் களைச் செயற் படுத்தல்.

## III ஆம் பகுதி

மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் பணிக் குழுவினர்

19. (i) மாகாணப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் அமைச்சர் அவர்களின் எழுத்து மூலமான அனுமதியுடன் அதிகார சபையினால் பொது அதிகாரியினை நியமித்தல் வேண்டும். மாகாண அதிகார சபை யின் பொது அதிகாரி.

(ii) மாகாணப் போக்குவரத்துச் சேவை அதிகாரப் சபையின் அன்றாட நடவடிக்கைகளை மேற் கொள்ளுதலும், அதிகார சபையில் பணி புரிகின்றவர்கள் பற்றி நிர்வாக கட்டுப்பாடுகளும், அதிகார சபையின் சாதாரண கட்டளைகளுக்கு மற்றும் நிர்வாகத்திற்கு உட்பட்டு பொது அதிகாரிக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.

(iii) இச் சாசனத்தினால் அதிகார சபைக்கு அளிக்கப்பட்டுள்ள சில அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கிடையே திறனான நிருவாகத்திற்குத் தேவை என்று அதிகார சபை கருதுகின்ற அதிகாரங்கள் மற்றும் பணிகள் மாகாணப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் காலத்திற்குக் காலம் பொது அதிகாரிக்கு மாற்ற முடியும். சாதாரண அதிகாரி அவ்வாறான அதிகாரம் மாகாணப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகத்திற்கு உற்பட்டு செயற்பட வேண்டும்.

(vi) தமது அதிகார பணிகள் அல்லது பணிகளிடையே மாகாண அதிகார சபையின் வேறு ஊழியர்களுக்கு மாற்றம் செய்ய தேவை என்று பொது அதிகாரி காலத்திற்குக் காலம் கருதுகின்ற, அதிகாரப் பணிகள் அல்லது பணியினை மாகாண அதிகார சபையின் எழுத்து மூலமான அனுமதியுடன் சாதாரண அதிகாரியினால் எழுத்து மூலம் அச் சேவை ஊழியர்களுக்கு மாற்ற முடியும் என்பதுடன், அவ்வாறான அதிகாரம், செயற்பாடுகள் அல்லது பணி அவ்வாறு மாற்றப்பட்ட ஒரு ஊழியரினால் பொது அதிகாரியின் சாதாரண அல்லது விசேட கட்டளைகளுக்கு உடன்பட்டு அவற்றை செயற்படுத்தல் வேண்டும்.

(v) அமைச்சரின் முன் அனுமதி இன்றி சாதாரண அதிகாரியை பதவியில் இருந்து அகற்ற முடியாது.

20. (i) மாகாணப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் மாகாண அதிகார சபை யின் பணிக்குழு வின் நியமனம் என்பன

(அ) மாகாணப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவை என்று கருதுகின்ற பணிக் குழுவினை நியமித்தல் மற்றும் அப் பணிக்குழு பற்றி ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

(ஆ) அப் பணிக் குழுவின் சம்பளம் அல்லது வேறு கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல்.

(இ) அப் பணிக் குழுவின் நற்பணிக்காக சேமலாப நிதி திட்டத்தினை அமைத்தலும் முறைப்படுத்தல் மற்றும் அவ்வாறான ஏதாவதொரு நிதியத்திற்கு அல்லது ஆலோசனைகள் திட்டத்திற்கு நிதி செலுத்த வேண்டும்.

(ii) வடமேல் மாகாண அரச சேவையில் எந்தவொரு உத்தியோகத்தரும் அதிகார சபையில் தற்காலிக அல்லது நிரந்தர பதவிக்கு நியமிப்பதற்கு தேவை என்று அதிகார சபையினால் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில், உரிய உத்தியோகத்தரின் விருப்பமும் / உரிய நியமன அதிகாரியின் மற்றும் வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் நியமிக்க முடியும்.

(iii) மாகாண அதிகார சபையின் கோரிக்கைப்படி அரச சேவையில் எந்தவொரு உத்தியோகத்தரும் அவ் உத்தியோகத்தரினதும், அவ் உத்தியோகத்தர் பதவியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது ஏதாவதொரு அமைச்சின் கீழானால் அவ் அமைச்சின் செயலாளரின் அரச நிருவாக அமைச்சின் செயலாளரினது விருப்பத்துடன், மாகாண அதிகார சபையினால் அவ்வாறான விருப்பத்துடன், நிச்சயிக்கப்படும் காலத்திற்காக மாகாண அதிகார சபையின் பணிக் குழுவிற்கு தற்காலிகமாக நியமிக்க முடியும். இல்லாவிட்டால் அவ்வாறான விருப்பத்துடன் அப் பணிக்குழுவிற்கு நிரந்தரமாக நியமிக்க முடியும்.

(vi) குறித்த காலத்தினுள் அரசிற்கு அல்லது மாகாண சபைக்கு பணியாற்றுவதற்கு இணங்கி அரசு அல்லது மாகாண சபையுடன் உடன்படிக்கைக்கு உள்ளாகும் ஒருவர், மாகாண அதிகார சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பத்தில், குறித்தவர் மாகாண அதிகார சபைக்கு சேவை செய்கின்ற குறித்த சேவை காலம் அரசின் அல்லது மாகாண சபையின் இணக்கத்துடன், அவ் உடன்படிக்கையின் ஒப்பந்தத்தினை நிறைவேற்றும் பணிக்காக அரசிற்கு அல்லது அம் மாகாண சபைக்கு செய்யப்படும் சேவையாக கருதப்படும்.

## (IV) ஆம் பகுதி

*நிதி*

*மாகாண அதிகார சபையின் நிதியம்.*

21\. (i) மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு அதிகார சபையினது நிதியம் இருத்தல் வேண்டும்.

(ii) மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் நிதியத்திற்கு கீழ் காணப்படும் நிதி செலுத்த வேண்டும்.

(அ) பயணிகள் மற்றும் / அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் மூலம் அறவிடப்படும் நிதி மற்றும் சொந்த அதிகார செயற்பாடுகள் மற்றும் பணிகளை செயற்படுத்தும் போது மற்றும் நிறைவேற்றும் போது மாகாண சபை அதிகார சபைக்கு கிடைக்கின்ற அனைத்து நிதிகளையும்,

(ஆ) வடமேல் மாகாணத்தின், மாகாண சபையினால் கிடைக்கின்ற உதவுத் தொகை உற்பட அதிகார சபைக்கு கிடைக்கின்ற அனைத்து பண வைப்புக்களும்,

(iii) இத் தொகை உரியவாறு நிர்வகித்தல் மற்றும் கணக்கில் வைப்பிலிடல் பொது முகாமையாளருடைய பொறுப்பாகும். இத் தொகையினை உரியவாறு நிர்வகித்தல் மற்றும் கணக்கில் வைப்பிலிடலுக்கான அதிகாரம் பணிக் குழுவிற்கு பொறுப்பளிப்பதற்கு பொது முகாமையாளருக்கு இயலுமை உண்டு.

(iv) இச் சாசனம் மற்றும் வேறு ஏதாவதொரு எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் மாகாண அதிகார சபையின் நடவடிக்கை முகாமைத்துவம் செய்தல் அதிகார சபையின் உறுப்பினர்களுக்கு மற்றும் அதிகார சபையில் பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியம் செலுத்துதல் மாகாண அதிகார சபையின் அதிகாரம் செயற்படுத்தல் மற்றும் பணி மற்றும் செயல்களை நிறைவேற்றல் பற்றி செய்யப்படும் ஏதாவதொரு செலவினை செலுத்துவதற்காக மற்றும் காலத்திற்கு காலம் அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்படும் வேறு பணிகளுக்காக மாகாண அதிகார சபையினால் அதிகார சபையின் நிதியினை பயன்படுத்தலாம்.

22. இச் சாசனத்தின் கீழ், மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் போது தமது பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்கு தேவையா கின்ற நிதி, மாகாண சபையின் நிதி, விடயப் பொறுப்புடைய அமைச்சரின் அனுமதியுடன் அல்லது அவரினால் வழங்கப்படும் பொது அனுமதிக்கான ஆணைகளுக்கு அமைய வங்கி மிகைப்பற்று மூலம் அல்லது வேறு எவ்விதத்திலாவது அதிகார சபையினால் கடனுக்கு எடுக்க முடியும். *அதிகார சபையில் கடன் எடுக்கும் அதிகாரம்.*

23. (i) மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் நிதி ஆண்டு நாட்காட்டி ஆண்டாக அமைய வேண்டும். *மாகாண அதிகார சபையின் கணக்கு.*

(ii) மாகாண அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவு, சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு கொடுக்கல் வாங்கள் பற்றி உரிய கணக்கு புத்தகங்களில் இடுவதற்கு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(iii) மாகாண அதிகார சபை அதன் கணக்கினை ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய தொகை, விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் அனுமதிக்கப்படுகின்ற தகைமையுடைய கணக்காய்வாளரினால் அக் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

(iv) மாகாண அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் பற்றி ஆண்டறிக்கை ஒன்றினை அதிகார சபையினால் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

(v) மாகாண அதிகார சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வறிக்கை அமைச்சரினால் நிதி ஆண்டு கடந்து 09 மாதங்கள் கடப்பதற்கு முன்பு மாகாண சபையில் சபைக்குற்படுத்தல் வேண்டும்.

(vi) 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் படி மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்தல் மற்றும் கணக்கு பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் சட்டத்தினை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும்.

## (V) **ஆம் பகுதி**

### பொது விதிகள்

24. (i) மாகாண அதிகார சபையின் அதிகாரம், பணி நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பயணிகள் மற்றும் போக்குவரத்துசேவையில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கு உரித்தான குறைந்த பட்ச ஊதிய விடுமுறை மற்றும் பணியாளர்களுக்கான சலுகைகள் பற்றிய ஆணை இடுவதற்கு இச் சாசனத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட எல்லா விடயங்கள் அல்லது இதில் சில விடயங்கள் பற்றி அமைச்சரினால் ஆணை இட முடியும். *கட்டளை விதிப் பதற்கு அமைச் சருக்கு அதிகாரம் உள்ளது பற்றி.*

(ii) அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்படுகின்ற எல்லா ஆணைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியில் அல்லது அது தொடர்பாக குறிப்பாக குறிப்பிட முடிந்த பின்பு வருகின்ற திகதியில் செயற்படுத்தப்பட வேண்டும்.

(iii) அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்படுகின்ற எல்லா ஆணைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு, இயன்றளவு அவசரமாக அனுமதிக்காக வடமேல் மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்படாத எல்லா ஆணைகளும் அதன் அனுமதி திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டியதுடன், அதன் கீழ் முன்பு செய்யப்பட்ட ஏதும் அதிகாரமற்றதாக கூடாது.

(iv) அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆணையினை அவ்வாறு இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும் திகதி பற்றிய அறிவித்தலினை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.

25. இச் சாசனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி தொடக்கம் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையில் 1995 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க பேரூந்துகளில் பயணிகள் போக்குவரத்து செய்யும் சேவைச் சாசனம் இரத்தாகின்றது. *தெருப் போக்கு வரத்து பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத் தினை இரத்து செய்தல்.*

## (VI) ஆம் பகுதி

### குற்றங்களும் தண்டனைகளும்

குற்றம்.

26. (i) அதிகார சபையினால் அல்லது வேறு ஏதாவதொரு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் அதிகார சபையின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பேரூந்துகளில் பயணிக்கின்ற

(அ) தம்மிடத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை செலுத்த தவறுகின்ற

(ஆ) உரிய இடத்திற்கு வருகை தந்த போது பேரூந்தில் இருந்து இறங்காது வேண்டுமென்றே நிராகரிக்கின்ற அல்லது தவறுகின்ற

(இ) எவர் ஒருவருக்கு அழுத்தமுடைய அல்லது அவமதிப்புடைய ஏதாவதொரு விதத்தில் ஆபாசமான, அசிங்கமான அல்லது உணர்ச்சி வேகத்துடனான மொழியில் அல்லது சைகைகளினால் அல்லது நடத்தையினை மேற்கொள்கின்ற அல்லது செயல்படுகின்ற பயணி ஒருவர் இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிவதுடன், அக் குற்றத்திற்கு பயணியிடத்தில் இருந்து அறவிடப்படும் கட்டணத்தினை விட இருமடங்கும் 1000.00 ரூபா நிலைய அபராதத்தினையும் (சேவைக் கட்டணம்) அதிகார சபையினால் அதிகாரத்தினை வழங்கியுள்ள எந்த ஒரு உத்தியோகத்தரிடத்திலும் செலுத்த முடியும்.

(ii)(அ) அதிகார சபையினால் அல்லது வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு அனுமதிப் பத்திரத்தில் அதிகார சபையினால் பயணிக்கின்ற பேரூந்தின் போக்குவரத்து உரிமப் பத்திரம் அல்லது அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு அதிகாரம் இன்றி பயணிக்கின்ற,

(ஆ) அப் பயண வழிப்பாதைக்காக தமக்கு வழங்கப்பட்ட டிக்கட்டினை பயணம் தொடங்கி இறுதிவரையில் தம்மிடத்தில் வைத்திருக்காத அல்லது

(இ) அப் பேரூந்துவின் நடத்துனரினால் அல்லது அச் சந்தர்ப்பத்திற்காக அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு ஒருவரினால் உரிமை கோரும் போது அந்த டிக்கட்டினை காட்டுவது அல்லது பொறுப்படைக்காதிருத்தல் அல்லது நிராகரிக்கின்ற எந்த ஒரு பயணி, இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிவதுடன், அக் குற்றத்திற்கு பயணியிடத்தில் இருந்து அறவிடப்படும் கட்டணத்தினை விட இருமடங்கும் 1000.00 ரூபா நிலைய அபராதத்தினை (சேவைக் கட்டணம்) அதிகார சபையினால் அதிகாரத்தினை வழங்கியுள்ள எந்த ஒரு உத்தியோகத்தரிடத்திலும் செலுத்த முடியும்.

(iii)(அ) அதிகார சபையின் அனுமதியுடன் அல்லது அதன் கீழ் வழங்கப்படுகின்ற டிக்கட்டினை மோசடியாக உபயோகிக்கப்படுகின்ற அல்லது அதற்காக வேறு ஒருவருக்கு அனுமதிக்கப்படுகின்ற எவர் ஒருவருக்கும்,

(ஆ) அவ்வாறான டிக்கட்டினை மோசடியாக உபயோகிக்கின்ற, தன்மையினை மாற்றுகின்ற, சிதைக்கின்ற அல்லது அழிக்கின்ற எவர் ஒருவருக்கும்,

(இ) அவ்வாறான டிக்கட்டினை அதிகார சபையின் அனுமதி இன்றி விற்பனை செய்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு அல்லது விற்பனைக்காக முன்னிற்கின்ற எவர் ஒருவரும்,

(ஈ) அனுமதி இன்றி அவ்வாறான டிக்கட்டினை அச்சிட்டதாக கருதுகின்ற அல்லது உபயோகித்த ஏதாவதொரு டிக்கட்டினை அச்சிடுகின்ற எவர் ஒருவரும்,

(உ) அதிகார சபையின் அனுமதியுடன் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்டதாக கருதுகின்ற,

(ஊ) பேரூந்தில் செல்லுபடியாகும் டிக்கட் பத்திரத்துடன் பயணிக்கின்ற பயணிக்கு மன அழுத்தமுடைய அல்லது அவமதிக்கின்ற ஏதாவதொரு வகையில் ஆபாசமான அசிங்கமான

அல்லது ஆவேசத்துடன் அல்லது அசைவு அல்லது நடத்தையில் ஈடுபடுகின்ற அல்லது செய்கின்ற உரிய பேரூந்து வண்டியின் சாரதி ஒருவர் அல்லது நடத்துனர் என்ற ஒருவருக்கு,

(எ) பயணிகளை கொண்டு செல்கின்ற பேரூந்தின் உள்ளே ஒலி பெருக்கி அல்லது உபகரணங்களின் சத்தத்தின் அளவு அதிகார சபையினால் விதிக்கப்படுகின்ற சப்தத்தின் அளவிற்கு மேற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய பேரூந்தில் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் சாரதி அல்லது நடத்துனர் ஒருவருக்கு,

(ஏ) சாரதி ஒருவர் அல்லது நடத்துனர் ஒருவர் அல்லது சாரதி உதவியாளராக உரியவாறு அதிகார சபையில் பதிவு செய்யப்படாது அல்லது அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பதிவினை இரத்து செய்யும் சந்தர்ப்பத்தில் அதிகார சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் பயணிகளின் போக்குவரத்தில் அல்லது பொருட்களை கொண்டு செல்லுவதில் ஈடுபடுகின்ற எவர் ஒருவரும்,

(ஐ) அதிகார சபைக்குரிய பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள அல்லது வேறு இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் அல்லது பயணிகளின் பாதுகாப்பு இடங்களில் அதிகார சபையின் அனுமதி இன்றி விளம்பரங்களை காட்சிப்படுத்துகின்ற அறிவித்தல்களை ஒட்டுகின்ற அல்லது எழுத்து, வசனங்கள், சொற்களை எழுதுதல் அல்லது உருவம் அல்லது புகைப்படம் அல்லது வேறு குறிகளை வரைந்து அறிவித்தல்களை காட்சிப்படுத்து கின்ற மற்றும் எவ்வகையிலாவது வேண்டும் என்றே அசுத்தப்படுத்துகின்ற எவர் ஒருவர்,நீதவானினால் குற்றவாளியாக்கப்பட்ட போது ஆயிரம் ரூபாவிற்கு குறையாத மற்றும் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கான இரண்டு விதத்தில் ஒரு விதத்தில் சிறைச்சாலைக்கு உட்படுத்துவதற்கு அல்லது அபராதமும் சிறைப்படுத்தல் இரண்டு விதத்திற்கும் அவர் /அவள் உற்படுதல் வேண்டும்.

(iv) மேற்கூறப்பட்ட (i), (ii), (iiii) உப பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர இச் சாசனத்தில் விதிகள் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்கி செயற்படு வதற்கு தவறுகின்ற எவர் ஒருவரும் குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன் நீதவானினால் அவ்வாறு குற்றவாளியாக்கப்படும் போது ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவிற்கு குறையாத மற்றும் இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கும் இரண்டு விதத்திலும் சிறைத் தண்டனை வழங்குவதற்கு அல்லது இரண்டு தண்டனைக்கும் உற்படுதல் வேண்டும்.

(v) இச் சாசனத்தின் கீழ் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட கட்டளையினால் ஏதாவதொரு குற்றம் செய்வதற்கு முற்படுகின்ற எவர் ஒருவருக்கும் அக் குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன், 2500.00 ரூபா வுக்கு மேற்படாத குற்றத்திற்கு அல்லது 6 மாத தளர்வான சிறைத்தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

(vi) இச் சாசனத்தில் மேலே உள்ள 1,2,3 ஆம் உப பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் செய்யப்படும் எவர் ஒருவருக்கும் எந்த பொலிஸ் உத்தியோகத்தரினாலும் சட்ட ரீதியாக கைது செய்யலாம், அவ்வாறு கைது செய்யப்பட்டவருக்கு உடனடியாக சட்டத்திற்கமைய செயற்படுவதற்காக நீதவான் முன்னிலையில் கொண்டு வருவதற்கு செயற்படுதல் வேண்டும். குற்றவாளிகளை கைது செய்தல்.

27. அறிந்து கொண்டே பொய்யான அல்லது பிழையான விபரங்களடங்கிய ஏதாவதொரு அறிக்கையினை எழுத்து மூலமான அறிக்கை அல்லது எழுத்து மூலமான அறிக்கைகளை விளக்கும் எந்த ஒரு நபரும் இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிந்தவராவதுடன், அது பற்றி நீதவான் முன்னிலையில் வழக்கு விசாரணையில் குற்றவாளியான சந்தர்ப்பத்தில் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஒரு ஆண்டிற்கு மேற்படாத காலத்திற்கான சிறைத் தண்டனைக்கு அல்லது உரிய தண்டமும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உற்படுதல் வேண்டும். பொய்யான அறிக்கை சமர்ப்பித்தல்.

28. இச் சாசனத்தில் ஏதாவதொரு கட்டளை அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்ட வெளியிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படுவதற்கான ஏதாவதொரு கட்டளை, ஆணை அல்லது தேவைகளை நிலைய நிலையக் கட்டணம்

தண்டத்தினை செலுத்துவதற்கு தவறுகின்ற, மீறுகின்ற அல்லது செயற்படாத எவர் ஒருவரும் இச் சாசனத்தின் கீழ் குற்றம் புரிந்தவராவதுடன், அது பற்றி நீதிவான் முன்னிலையில் வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாகும் சந்தர்ப்பத்தில் ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஒரு ஆண்டிற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது உரிய தண்டமும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உற்படுதல் வேண்டும்.

பணியாளர் குழுவினால் செய்யப்படும் குற்றங்கள் பற்றி சிலர் கீழ் படிதல் பற்றி.

29. இச் சாசனத்தில் அல்லது சாசனத்தின் கீழ் விதிக்கப்பட்ட கட்டளை ஒன்றின் கீழான குற்றத்தினை பணியாளர் குழுவினால் செய்யப்படும் சந்தர்ப்பத்தில்

(i) அப் பணியாளர் குழு நிறுவனமாயின் குற்றம் புரியப்பட்ட சந்தர்ப்பத்தில் அந் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவரை பொது அதிகாரியினை, செயலாளர் ஒருவரை அல்லது அதற்கு சமமான வேறு திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் இருக்கும் எல்லோராலும்,

(ii) அப் பணிக் குழு வியாபார நிறுவனமாயின், குற்றம் புரிகின்ற சந்தர்ப்பத்தில் அவ் வர்த்தக நிறுவனத்தில் உரிமையாளரை அல்லது பங்குதாரராக இருக்கும் எல்லோரும் குற்றம் செய்யப்பட்டது அவர் அறியாது அல்லது அலட்சியமாக அன்றி என்று மற்றும் சுய பணிகளின் தன்மை மற்றும் எல்லா சந்தர்ப்பங்களதும் காரணங்களை கவனத்தில் கொண்டு குற்றம் புரிவதனை தடுப்பதற்காக அவரினால் செயற்படுத்த வேண்டியதாக இருந்த உரிய எல்லா ஆவணங்களையும் அவரினால் செயற்படுத்தப்பட்டதாக அவரினால் உறுதிப்படுத்தப்பட்டால் அன்றி அவர் அக் குற்றம் சம்பந்தமாக குற்றவாளியாக கருதப்பட வேண்டும்.

வழக்கு தொடர்வதற்காக அதிகாரம் வழங்குதல்.

30. (i) இச் சாசனத்தின் கீழ் குற்றம் பற்றி வழக்கு நடவடிக்கை தொடரும் நடவடிக்கைக்காக அதிகார சபையினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பணியாளர் ஒருவர் 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான குற்றவியல் வழக்கு கட்டளை கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் பொருள்படி அரச உத்தியோகத்தராக கருதப்பட வேண்டும்.

பேரூந்து நிறுத்தும் இடங்கள்.

(ii) அங்கீகரிக்கப்படாத பேரூந்து நிறுத்தும் இடங்களில் இருந்து பயணிகளை ஏற்றுவது அல்லது ஏற்றுவதற்கு உதவுதல், பயணிகளை ஒன்று சேர்க்கும் நோக்கில் ஒலி எழுப்பி சப்தமிடல், அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் கடமை நடவடிக்கைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல், தண்டனைக்குரிய குற்றமாகும். அச் சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கான சிறைத் தண்டனைக்கு உற்படுதல் வேண்டும்.

உரிமப்பத்திரம் இன்றி பாடசாலை பிள்ளைகளை கொண்டு செல்லுதல்.

(iii) அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப் பத்திரம் இன்றி பாடசாலை பிள்ளைகளை கொண்டு செல்ல கூடாததுடன்,

அவ்வாறு செய்வது இச் சாசனத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மேற்குறிப்பிட்ட குற்றத்தை புரிகின்ற ஒருவர் அல்லது அக் குற்றத்திற்காக ரூ.2000.00 நிலையத் தண்டத்தினை அதிகார சபையில் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவருக்கு அறவிட முடியும். என்றாலும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு உற்படுதல் வேண்டும்.

உரிமப் பத்திரம் இன்றி பொது போக்குவரத்து சேவை வழங்குதல்.

(iv) அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற ஏதாவதொரு அனுமதிப்பத்திரம் இன்றி கைத்தொழில் பேட்டை அல்லது சேவை நிலையங்களுக்காக பணியாளர்களை கொண்டு செல்ல கூடாததுடன், அவ்வாறு செய்வது இச் சாசனத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாவதுடன், அக் குற்றத்தினை புரிகின்றவரினால் அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை போன்று இரு மடங்கு மற்றும் ரூ.1000.00 நிலையக் தண்டம் (சேவைக் கட்டணம்) அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்த வேண்டும். அச் சந்தர்ப்பத்தில் பொலிஸ்

உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வாறான நபருக்கு எதிராக உரிய நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியான சந்தர்ப்பத்தில் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு அனுமதிப்பத்திரம்இன்றி முச்சக்கர வண்டிகளில் பயணிகளை கொண்டு செல்லலாகாததுடன், அவ்வாறு செய்வது இச் சாசனத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அக் குற்றத்தினை புரிகின்றவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை போன்று இருமடங்கும் 1000.00 ரூபா நிலையத் தண்டப் பணமும் (சேவைக் கட்டணம்) அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்படும் அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்த வேண்டும். அவ்வாறு தண்டத் தொகையினை செலுத்தப்படவில்லையானால் அச் சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியானால் இரண்டாரயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது மூன்றாண்டிற்கு மேற்படாத காலத்திற்கான சிறைத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். *உரிமப்பத்திரம் இன்றி முச்சக்கர வண்டி.*

(vii) அதிகார சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி பொருட்களை கொண்டு செல்லுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். அக் குற்றம் செய்யப்படுபவரினால் அறவிடப்பட வேண்டியக் கட்டணம் போன்று இருமடங்கும் 1000.00 ரூபா நிலையத் தண்டப் பணமும் (சேவைக் கட்டணம்) அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்படும் அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்த வேண்டும்.அவ்வாறு தண்டத் தொகையினை செலுத்தப்படவில்லையானால் அச் சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக உரிய நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவதுடன், வழக்கு விசாரணையின் போது குற்றவாளியானால் இரண்டாரயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது மூன்றாண்டிற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

31. அதிகார சபையினால் இச் சாசனத்தின் கீழ் அதிகார சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது அல்லது அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது அதற்கு சட்ட விரோதமான வகையில் தடைகள் ஏற்படுத்துகின்ற, தலையிடுகின்ற, எதிர்க்கின்ற அல்லது இடையூறு விளைவிக்கின்ற, தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிக்கின்ற அல்லது அவ்வாறு செய்வதற்கு முயற்சிக்கின்ற எவர் ஒருவருக்கும் இச் சாசனத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன், நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற பதிவு வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக காணப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது இந்த இரண்டு தண்டனைகளுக்கும் உட்படுதல் வேண்டும். *அதிகார சபைக்கு தடைகள் ஏற்படுத்தல் தாக்கங்கள் ஏற்படுத்தல்*

## VII **ஆம் பகுதி**

### பொது விதிகள்

32. (i) அதிகார சபையினால் அதன் அதிகாரங்களை செயற்படுத்துவது பற்றி அமைச்சரினால் அதிகார சபைக்கு காலத்திற்கு காலம் பொது அல்லது விசேட விதிகளை வழங்கப்பட வேண்டியதுடன் அதிகார சபையினால் அவ் விதிகளை செயற்படுத்தல் வேண்டும். *கட்டளைகளை வழங்குவதற்கு அமைச்சருக்கு உள்ள அதிகாரம்*

(ii) அதிகார சபையின் நடவடிக்கை பற்றி தம்மால் விதிக்கப்படுகின்ற மாதிரிப் படிவத்தினால் தம்மிடத்தில் கால அறிக்கை கணக்கு மற்றும் வேறு தகவல்களை வழங்குமாறு அமைச்சரினால் காலத்திற்கு காலம் அதிகார சபைக்கு கட்டளை இட முடிவதுடன் அதிகார சபையினால் அவ் எல்லா கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

33. அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட மற்றும் வேறு ஏதாவது அதிகார சபையின் அதிகாரம் உள்ள எவர் ஒருவரினாலும் எந் நேரத்திலாவது வடமேல் மாகாணத்தினுள் எவ்விடத்திலாவது, *வாகனங்கள் உட் பிரவேசித்தல் மற்றும் தேடுதல்.*

(i) பொருட்கள் அல்லது பயணிகளை கொண்டு செல்வதற்கான சேவையில் ஈடுபடுகின்ற எந்தவொரு மோட்டார் வண்டியினையும் அதற்கான அதிகாரம் இச் சாசனத்தின் கீழ் அல்லது வேறு நிறுவனங்களினால் கிடைக்கப் பெற்றுள்ளதா என்று அவ் அனுமதிப் பத்திரற்கு உரிய நிபந்தனைகளை உடைய உரிய வாகனத்தின் சாரதி, நடத்துநர், சாரதி உதவியாளர் அல்லது பொறுப்பாக உள்ளவரினால் பின்பற்றி உள்ளாரா என்பது பற்றி தெரிந்துக் கொள்வதற்காக உரிய வாகனத்திற்கு உள்ளே பிரவேசித்தல் அல்லது வாகனத்தினை பரிசோதிக்கலாம்.

(ii) பயணி அல்லது பொருட்களைக் கொண்டு செல்வதற்காக உரிய வாகனத்திற்கு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் அல்லது உரிய வாகனத்திற்காக வழங்கப்பட்டுள்ள வேறு ஏதாவதொரு ஆவணம் அல்லது சமர்பிக்குமாறு அவ் வாகனத்தின் சாரதிக்கு, நடத்துனருக்கு அல்லது சாரதி உதவியாளருக்கு அல்லது பொறுப்பாக உள்ளவருக்கு கட்டளையிடலாம். அல்லது

(iii) அந்த அனுமதிப் பத்திரம் அல்லது வேறு ஆவணங்கள் அல்லது அதன் பிரதி ஒன்றினை தமது பொறுப்பிற்கு எடுக்க முடியும்.

(iv) மோட்டார் வாகன திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சாரதி உரிமப் பத்திரம் ஆண்டு வருமான உரிமப் பத்திரம் மற்றும் உரியதென்று எண்ணுகின்ற வேறு ஆவணங்களை பரிசீலிக்க முடியும்.

வழக்குதொடருவதனால் பாதுகாப்பு

34. (i) (அ) அதிகார சபையினால் இச் சாசனத்தின் கீழ் விசுவாசத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்வதாக சொல்லப்படுகின்ற அல்லது ஏதாவதொரு செயற்பாடு பற்றி அதிகார சபைக்கு எதிராக அல்லது,

(ஆ) அதிகார சபையின் எந்த ஒரு உறுப்பினரினால், உத்தியோகத்தரினால் அல்லது பணியாளரினால் இச் சாசனத்தின் கீழ் அல்லது அதிகார சபையின் கட்டளைப்படி விசுவாசத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கூறுகின்ற ஏதாவதொரு செயற்பாடு அல்லது செய்யப்படாதது பற்றி அந்த உறுப்பினருக்கு உத்தியோகத்தருக்கு அல்லது பணியாளருக்கு எதிராக எவ்வித சிவில் அல்லது குற்றவியல் வழக்கு தொடர கூடாது.

(ii) அதிகார சபைக்கு எதிராக ஏதாவதொரு சிவில் அல்லது குற்றவியல் வழக்கின் போது அதிகார சபையினால் ஏற்கப்பட்ட செலவினை அதிகார சபையின் நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டும். அவ்வாறான சிவில் அல்லது குற்றவியல் வழக்கினால் அதிகார சபையினால் அறவிடப்படுகின்ற ஏதாவதொரு செலவு அல்லது நட்டஈடு அதிகார சபையின் நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். உரிய குற்றத்திற்கு உடந்தையான உத்தியோகத்தர் இச் சாசனத்தின் அல்லது அதிகார சபையினால் விதிக்கப்பட்ட சட்டம் /ஒழுங்குவிதிகளை மீறிய சந்தர்ப்பத்தில் அவர் அது பற்றி தனிப்பட்ட முறையில் பொறுப்பு கூற வேண்டியதுடன், உரிய தொகையினை அதிகார சபையின் நிதியத்தினால் செலுத்துவது பற்றி தீர்மானிக்கும் அதிகாரம் பணிப்பாளர் குழுவிற்கு உரியதாகும்.

நிலைய சேவைக் கட்டணம்

35. (i) அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தியோகத்தரினாலும் அல்லது இச் சாசனத்தின் கீழான அனுமதிப் பத்திரம் ஒன்றினை அதிகார சபையின் கீழ் பயணி அல்லது பொருட்களை கொண்டு செல்கின்ற மோட்டார் வண்டிக்கு உரியதான இச் சாசனத்தில் குறித்த சட்டத்திட்டங்களை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் வழக்கு தொடர்வதற்கு பதிலாக செல்லுபடியாக காணப்படுகின்ற ஆகக் கூடிய நிலைய சேவைக் கட்டணத்திற்கு உட்பட்டு சேவைக் கட்டணம் விதிக்கப்படலாம். அது பற்றி அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் அல்லது உரிய உத்தியோகத்தரினால் உகந்த வகையில் போக்குவரத்து வழியினை மற்றும் மோட்டார் வண்டியின் இலக்கத்துடனும் அதிகார சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(ii) அவ்வாறான நிலையச் சேவைக் கட்டணம் அதிகார சபையிடத்தில் அல்லது அதிகார சபையின் உப அலுவலகத்திற்கு அதிகார சபையின் நிதியத்திற்கு வரவில் வைக்கும் வகையில் செலுத்தி செலுத்தப்பட்டதற்கான சாட்சியாக குற்றத்தினை கண்டுபிடிக்கப்பட்ட திகதி தொடக்கம் இரண்டு வாரத்தினுள் உரிய பற்றுச் சீட்டினை அதிகார சபைக்கு சமர்பித்தல் வேண்டும்.

36. இச் சாசனத்தின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா அனுமதிப்பத்திரமும் அந்த உரிமப் பத்திரத்தினை வழங்கப்பட்ட மோட்டார் வண்டியில் முன் பக்க கண்ணாடியில் தெளிவாக தெரியும் வகையில் காட்சிப்படுத்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தினை காட்சிப்படுத்தல் வேண்டும்.

37. பயணிகள் போக்குவரத்து சேவையின் குறைபாட்டினை கருத்தில் கொண்டு உரிய சந்தர்ப்பத்தில் பொது அரச கொள்கைகளுக்கு அமைய பேரூந்து வண்டிகளை விலைக்கு வாங்குவதற்காக வசதிகள் மற்றும் வரிச் சலுகை வழங்குவதற்காக அதிகார சபையினால் பரிந்துரை வழங்க முடியும். பேரூந்து வண்டியினை விலை வாங்குவதற்காக மற்றும் பரிந்துரை

38. (i) (அ) அமைச்சரினால் இச் சாசனத்தின் சட்டதிட்டங்களை செயற்படுத்தும் மற்றும் அதிகாரப்படுத்தும் பணிக்காக கட்டளைகளை அமைக்கலாம். சாசனத்தின் கீழ் கட்டளைகளை அமைத்தல்

(ii) (அ) மேற்குறிப்பிடப்பட்ட 38(1) அ ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை பொது தன்மைக்கு குறைபாடு ஏற்படாதவாறு அமைச்சரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அல்லது ஒவ்வொரு காரணங்கள் பற்றியும் கட்டளைகளை அமைக்க முடியும்.

(ஆ) இச் சாசனத்தின் கீழ் கட்டளை விதிப்பதற்காக குறித்த அல்லது அதிகாரம் வழங்கப்படுகின்ற எல்லா காரணங்களும்.

(இ) அனுமதிப் பத்திரம் மற்றும் வேறு அதிகாரங்களை வழங்குதல், புதுப்பித்தல், திருத்தம் செய்தல், உரிமையினை முறைப்படுத்தல் மற்றும் அது பற்றி இறுதியான நடவடிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய செயல்முறைத் திட்டம் மற்றும் உபயோகப்படுத்தப்பட வேண்டிய மாதிரிப் படிவம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தினை விதித்தல்.

(ஈ) தெருக்களின் உகந்த நிலை மற்றும் உபயோகப்படி உரிய தெருக்களின் கட்டணப்படி பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்காக உபயோகப்படுத்தப்பட வேண்டிய மோட்டார் வாகனத்தினை நிர்ணயித்தல் மற்றும் உரிய மோட்டார் வாகனத்தினை உபயோகித்தல் சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை நிர்ணயித்தல்.

(உ) அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் உபயோகப்படுத்தப்படுகின்ற வாகனத்தின் சாரதி, நடத்துனர், சாரதி உதவியாளர் அல்லது வாகனத்திற்குப் பொறுப்பாக உள்ளவரினால் கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள் மற்றும் அவற்றில் உட்படுத்தப்பட வேண்டிய மற்றும் உட்படுத்த வேண்டிய விபரங்கள்.

(ஊ) சட்ட ரீதியான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் உபயோகப்படுகின்ற பேரூந்துகளில் பயணிக்கும் பயணங்களின் எண்ணிக்கைகளை வைத்திருக்க வேண்டிய அறிக்கை,

(எ) அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனத்தினை உபயோகப்படுத்தப்படுகின்ற எவர் ஒருவரினாலும் பின்பற்ற வேண்டிய விதிகள்.

(ஏ) சட்டரீதியான பயணிகள் மற்றும் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை வைத்திருப்பவரினால் அவ் அனுமதிப்பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற பேரூந்துகளின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றவர்கள் பற்றி மற்றும் அவர்களின் சேவையினை ஆரம்பிக்கின்றதும் முடிவுறுத்துகின்ற நேரம் மற்றும் அவர்களினால் எடுக்கப்படுகின்ற ஓய்வு நேரம் பற்றி அவ் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் வைத்திருக்க வேண்டிய அறிக்கை.

(ஐ) அவ்வாறு வைத்திருக்கும் அறிக்கையினை பாதுகாப்பாக வைத்திருத்தல், அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டவரினால் அவ் அறிக்கையினை பரிசீலித்தல் மற்றும் அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டவரினால் கோரும் போது அவ் அறிக்கையினை பரிசீலிப்பதற்காக சமர்ப்பித்தல்.

(ஒ) அனுமதிப்பத்திரங்களில் அதிகார சபையினால் பயணிகள் போக்குவரத்து அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற சாரதிகள் நடத்துனர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களை பதிவு செய்தல், அப்பதிவு செய்யப்பட்டதை புதுப்பித்தல், இரத்து செய்தல் மற்றும் இடைநிறுத்துதல் பற்றிய செயற்றிடத்தினை ஒழுங்கமைத்தல்.

(ஓ) அனுமதிப்பத்திரங்களில் அதிகார சபையின் கீழ் சட்டரீதியான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற மோட்டார் வாகனங்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களினால் அணிந்திருக்க வேண்டிய /சீருடை மற்றும் சின்னத்தினை குறிப்பிடல், அவ் வாகனங்களின் சாரதிகள், சாரதி உதவியாளர்கள் மற்றும் நடத்துனர்கள் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களினால் பின்பற்ற வேண்டிய ஒழுக்காற்று சட்டத்தினை விதித்தல்.

(ஔ) விசேடமாக பேரூந்து போக்குவரத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் நேரங்களை பதிவு செய்தல் மற்றும் வதிகளை உரியவாறும் சாதாரணமாகவும் வழங்குவதற்காக பேரூந்துகளை நிறுத்திவைக்கும் இடங்களையும் வாகனங்களை நிறுத்துமிடங்களை முகாமைத்துவம் செய்தல் பற்றி,

(ஃ) மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் அல்லது ஏதாவதொரு அதிகார சபை அதிகாரத்தின் கீழ் பயணிக்கின்ற பாடசாலை வேன், முச்சக்கர வண்டி, (ரைசிகள்) வாடகை வண்டிகளுக்காக வேறு ஒரு சட்டத்தின் கீழ் ஒழுங்குப்படுத்தாத பயணிகள் சேவைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணத்தினை விதித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றினை திருத்தம் செய்தல்.

(க) சட்டரீதியான பயணிகள் மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்கான சேவை மற்றும் விசேட பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற சாரதிகள், சாரதி உதவியாளர்களின் மற்றும் நடத்துநர்களின் ஆகக் குறைந்த தகைமையினை விதித்தல் மற்றும் அவர்களின் உடல் மற்றும் உள நிலையினை காலத்திற்குக் காலம் பரிசீலனைக்கு உட்படுத்தல்.

(கா) மாகாணங்களுக்கு இடையிலான உரிமப்பத்திர தாரிகள் பேரூந்துகளை வடமேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்தின் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய நிபந்தனை விதித்தல்.

(iii) இங்கு 38(1) 1 ஆம் உப பிரின் கீழ் அமைக்கப்பட்ட எல்லா கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்படுகின்ற தினத்தில் அல்லது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு திகதியில் அதனை செயற்படுத்த வேண்டும்.

(iv) இங்கு 1 ஆம் உப பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள எல்லா கட்டளைகளும் அவற்றினை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின் இயன்றளவு அவசரமாக அனுமதிக்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பு அனுமதிக்கப்படாத ஏதாவதொரு கட்டளை இருப்பின் அதன் கீழ் முன்பு செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அனுமதிக்கப்பட்ட திகதி தொடக்கம் அக் கட்டளையினை முடிவுறுத்தப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

(v) ஏதாவதொரு கட்டளையினை அவ்வாறு முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படும் திகதியினை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.

## VIII **ஆம் பகுதி**

அகற்றுதல் மற்றும் இடைக்கால விதிகள்

*அகற்றப்பட்ட சாசனத்தின் கீழான ஒழுங்கு விதிகள் (கட்டளை).*

39. அமைச்சரினால் இச் சாசனத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் அதிகார சபையின் கீழ் அதிகார சபையின் உறுப்பினர்களை நியமிக்கும் வரையில் வடமேல் மாகாணத்தின் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்திற்கான பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இச் சாசனம் செயற்படுத்தப்படும் திகதிக்கு அண்மித்த திகதி வரை 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து

சேவை அதிகார சபையில் உறுப்பினர் பதவி வகிக்கின்ற எல்லா உறுப்பினர்களும் இச் சாசனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் உறுப்பினர்களாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

40. (i) சாசனத்தினை செயற்படுத்தும் திகதிக்கு முன்புள்ள திகதியில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைச் சாசனத்தின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள எல்லா உத்தியோகத்தர்களும் வேறு சேவைகளை பெறுநர்களும் உரிய பயணிகள் போக்குவரத்து சேவைச் சாசனத்தின் கீழான சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சம்பந்தமான கட்டளைகள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு உட்பட்டு அதிகார சபையின் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களாக கருதப்பட வேண்டும். அச் சேவையினை பெறுநர்களது சேவையினை அவர்களது சேவை பெறுநர் பற்றி சட்டரீதியான காரணம் தவிர வேறு விதத்தில் முடிவுறுத்த கூடாது.

அதிகார சபையில் சேவை பெறுநர்கள்

(ii) சாசனம் செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள உரிய அதிகார சபைக்குரிய எல்லா நிதியங்கள் உட்பட உரிய அதிகார சபையின் எல்லா நிலையான மற்றும் நிலையற்ற சொத்துக்கள் அதிகார சபைக்கு உரித்தாக்க வேண்டியதுடன் எல்லா சொத்துக்களும் அதிகார சபைக்குரிய சொத்தாக வேண்டும்.

உடன்படிக்கையின் உரிமைகள் கடமைகள் பொறுப்பு மற்றும் ஒதுக்கப்பட்டுள்ளதும் தற்போதுள்ள வழக்குகளுக்கான மானியம்

(iii) சாசனம் செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் அதிகாரப்படுத்தப்பட்டு காணப்படும் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பணியாளர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊக்குவிப்பு சம்பளம் பற்றி எல்லா கடமைகள் மற்றும் பொறுப்பு உட்பட எல்லா ஒப்பந்தமும் உடன்படிக்கைகளும் அதிகார சபையின் ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையாக கருதப்பட வேண்டும்.

(iv) சாசனத்தில் செயற்படுத்தப்படும் திகதிக்கு முன்புள்ள திகதியில் ஏதாவதொரு நீதிமன்றத்தில் அல்லது நடுவர் குழுவில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அல்லது அவ் அதிகார சபைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள அல்லது சமர்ப்பிக்கப்பட்ட வழக்கு, கோரிக்கை அல்லது முறையீடாக கருதப்பட வேண்டியதுடன், அவற்றை கொண்டு நடாத்தல் அல்லது முடிவுறுத்த முடியும்.

(v) குறித்த திகதிக்கு முன்புள்ள திகதியில் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அல்லது அதற்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வழக்கின் போது, கோரிக்கையின் போது அல்லது முறையீட்டின் போது, நீதிமன்றம் அல்லது தீர்ப்பு அதிகார சபையினால் அறிவித்துள்ள அல்லது வழங்கப்படுகின்ற உரிய திகதிக்கு முன்புள்ள திகதியிலேயே அதனை முழுமையாகவோ ஒரு பகுதியினையோ நிறைவேற்றாது மீதமாக காணப்படும் ஏதாவதொரு தீர்ப்பினை அல்லது வழங்களினை சந்தர்ப்பத்திற்கேற்ப அதிகார சபைக்கு அனுகூலத்திற்கு அல்லது அதற்கு எதிராக அறிவித்துள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை அறிவித்தலுக்கு அல்லது வழங்குவதற்கோ கருதப்பட வேண்டியதுடன் சிவில் வழக்கு விதிக் கோவையின் சட்டதிட்டங்களுக்கு அல்லது தீர்மானத்தையோ வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்குரிய வேறு ஏதாவதொரு சாசனத்திற்கு உட்பட்டு அதிகார சபையினால் அல்லது அதற்கு எதிராக செயற்பட முடியும்.

(vi) 1995 ஆம் ஆண்டின் 04 இலக்கத்திற்கான வடமேல் மாகாணத்தின் வீதி பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ் வழங்கப்பட்டதும் அல்லது உரிய சாசனத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றாக கருதப்பட்ட போதும் இச் சாசனம் அதிகாரப்படுத்தப்படும் திகதிக்கு ஆரம்பத்தில் செல்லுபடியாக இருந்ததாலும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் அல்லது வேறு ஏதாவதொரு ஆவணத்தினால் இச் சாசனத்தின் கீழ் முன்பு வழங்கப்பட்டு இரத்து செய்யப்படாவிட்டால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்தினுள் இச் சாசனம் வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமாக கருதப்பட வேண்டும்.

*41.* இச் சாசனம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வசனங்களிடையே ஏதாவதொரு வேறுபாடு ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழியின் வசனங்கள் அதிகாரப்படுத்தப்படும்.

## IX ஆம் பகுதி

பொருள் விளக்கம்

*42.* இச் சாசனத்தில் வசனம் சம்பந்தமாக விளக்கம் தேவைப்பட்டால்,

* 'அமைச்சர் அவர்கள்' என்பது வடமேல் மாகாண சபையின் அமைச்சுக் குழுவின் போக்குவரத்துசேவை விடயப் பொறுப்புடைய அமைச்சர் என்று கருதப்படும்,

* 'அமைச்சுக் குழு' என்பது வடமேல் மாகாண சபையின் அமைச்சுக் குழு என்று கருதப்படும்,

* 'மாகாணம்' என்பது வடமேல் மாகாணம் என்று கருதப்படும்.

* 'சபை' என்பது வடமேல் மாகாண சபை என்று கருதப்படும்.

* 'உத்தியோகத்தர்' என்பது வடமேல் மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையில் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்கள் உட்பட அதிகார சபையில் பணி புரிகின்ற எல்லா பணியாளர்களும் என்று கருதப்படும்.

* 'சிரேஷ்ட உத்தியோகத்தர்' என்பது இலங்கை நிருவாக சேவையில் உதவி செயலாளர் பதவிக்கு குறையாத பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அதற்கு சமமான சேவைகளில் அதற்கு சமமாக கடமைப் புரிகின்ற ஒருவர் என்று கருதப்படும்.

* 'அனுமதிப் பத்திரம்' என்பது 'பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம்' 'பொருட்கள் கொண்டு செல்லும் சேவைகளுக்கான அனுமதிப் பத்திரம்', 'விசேட சேவை அனுமதிப்பத்திரம்', 'தெரு உரிமப் பத்திரம்' மற்றும் சட்டரீதியான போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம்' 'பாடசாலை சேவை அனுமதிப்பத்திரம்' 'கைத்தொழில் பேட்டை போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம்' ஆகிய பெயர்களில் எந்தவொரு பெயரிலாவது இச் சாசனத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் கட்டணம், பரிசு, கைமாறாக அல்லது வெவ்வேறு கட்டணங்கள் மூலம் மோட்டார் வாகனத்தினால் பயணிகள் போக்குவரத்தில் அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் என்று கருதப்படும்.

* 'போக்குவரத்து சேவை' என்பது பயணிகள் அல்லது பொருட்களை கொண்டு செல்கின்ற மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.

* 'பேரூந்து நிறுத்தும் இடம்' என்பது வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்து பயணிகள் முனையம் என்று கருதப்படுவதுடன், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்துகளை தரிக்கும் இடங்கள் அதிகார சபைக்குரிய வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பேரூந்து நிறுத்துமிடங்கள் மற்றும் தெருக்களில் பேரூந்துகளை நிறுத்துமிடங்கள் இதில் அடங்க வேண்டும்.

* 'வர்த்தமானி' என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி என்று கருதப்படும்.

* 'உள்ளூராட்சி நிறுவனம்' என்பது மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை என்று கருதப்படும்.

* 'பேரூந்து அல்லது ஓமினி பேரூந்து' என்பது மோட்டார் வண்டி சட்டத்தின் கீழ் ஓமினி பேரூந்து வண்டியாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் கோச் வண்டி என்று கருதப்படுவதுடன் இதற்கு இரட்டை நோக்கம் கொண்ட வாகனமும் அடங்குவதாக கருதப்பட வேண்டும்.

* 'பயணி' என்பது வாடகை வாகனத்தில் அல்லது பேரூந்தில், பாடசாலை சேவை பேரூந்து அல்லது வேன், கைத்தொழில் பேட்டை பேரூந்தில் போக்குவரத்து செய்கின்ற என்றாலும் சாரதி மற்றும் பேரூந்தில் என்றால் நடத்துனர் /சாரதி உதவியாளர் உட்படாத நபர் என்று கருதப்படும்.

* 'வெவ்வேறு கட்டணம்' என்பது பேரூந்தில் பயணியாக கொண்டு செல்வதற்காக உரிமை வழங்கப்படுபவரினால் செலுத்தப்படும் கொடுப்பனவு என்று கருதப்படும்.

* 'மோட்டார் வண்டி' என்பது மோட்டார் வண்டி போக்குவரத்து சட்டத்தில் பொருள் விளக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.

* 'மோட்டார் வாகனம்' என்பது மோட்டார் வண்டி சட்டத்தில் பொருள் விளக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.
* 'லொரி' என்பது மோட்டார் வண்டி சட்டத்தில் பொருள் விளக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.

* 'ரேலர்' என்பது மோட்டார் வண்டி சட்டத்தில் பொருள் விளக்கப்பட்டுள்ள ரேலர் என்று கருதப்படும்.

* 'வாடகை போக்குவரத்து' என்பது பெருந்தெருவில் அல்லது வேறு இடத்தில் பயணிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக நிறுத்தி வைத்திருத்தல், அல்லது போக்குவரத்து செய்தல் என்று கருதப்படும்.

* 'பயணிகள் போக்குவரத்து சேவைகள்' என்பது பெருந்தெரு ஊடாக கட்டணம் அறவிட்டு பயணிகளை பாடசாலை மாணவர்கள், அலுவலக பணியாளர்கள், கைத்தொழில் பேட்டை தொழிலாளர்கள் முச்சக்கர வண்டி (ரைசிகள்) மூலம் போக்குவரத்து செய்கின்ற எல்லா வாகனங்களும் என்று கருதப்படும்.

* ஒழுங்கு முறைப்படி ஆட்சேர்ப்பு நடைமுறை என்று கருதுவது வடமேல் மாகாண ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையாகும்.

* 26 ஆம் பிரிவில் 'மோட்டார் வாகனம்' என்பது பயணிகளை கொண்டு செல்வதற்கான சேவையில் ஈடுபடுகின்ற மோட்டார் வாகனம் என்று கருதப்படும்.

* 27 ஆம் பிரிவில் 'மோட்டார் வாகனம்' என்பது பொருட்களை கொண்டும் செல்லும் சேவையில் ஈடுபடுகின்ற லொரி, ரேலர் ஆகிய வாகனங்கள் என்று கருதப்படும்.

*3-341*

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### மேல் மாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2018

01. மேல் மாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இந்த விளம்பர அறிவித்தலில் குறிப்பிட்டவாறான தகுதி கொண்ட மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிட இலங்கைப் பிரசைகளான பெண்/ஆண் ஆகிய இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. (அ) விளையாட்டு அலுவலகர் தரம் III சம்பள அளவுத் திட்டம் 29,840-10X300-11X350-10X560-10X660-48,890 (பொ.நி.சு.) MT 1/2016 இன்படி

03. கல்வி, தொழில்சார் மற்றும் வேறு தகைமைகள்

3.1. அ. கல்வித் தகைமைகள்

(i) க.பொ.த. (சா.த.) சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் எல்லாமாக ஆறு (6) பாடங்களில் 2 தடவைகளுக்கு மேற்படாமல் தோற்றி சித்தியடைந்திருத்தல் மற்றும்

(ii) தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவகம் மூலம் நடாத்தப்படும் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்திருத்தல்.

ஆ. (i) தொழில்சார் தமைமைகள்

ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியில் தேசிய அணியின் அங்கத்தவராக ஏற்றுக் கொள்ளப்பட்டு சர்வதேச விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியிருத்தல் அல்லது

(ii) விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் தேசியமட்ட விளையாட்டு விழாவில் ஏதேனும் தேசிய மட்டத்தில் 1,2,3 நிலைகளைப் பெற்றிருத்தல் அல்லது மாகாண மட்டத்தில் 1,2 நிலைகளைப் பெற்றிருத்தல் அல்லது தேசிய விளையாட்டுக்கழகத்தின் ஊடாக நடாத்தப்படும் முன்மை திறந்த தேசிய போட்டியில் 1,2,3 நிலைகளைப் பெற்றிருத்தல்.

இ. உடல்சார் தகைமைகள்

இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவில் உடல், உள ரீதியான ஆரோக்கியத்துடன் இருத்தல். உடற்தகுதி பரிசீலனை தொடர்பாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் அல்லது மாகாண விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவகத்தின் வைத்திய பிரிவின் மூலம் நடாத்தப்படும் சரீர செய்முறைப் பரிசோதனையில் சித்தி பெறல் வேண்டும். சரீர செய்முறைப் பரிசோதனையில் எதிர்விளைவு, வேகம், வளையக்கூடிய தன்மை, பாரம் தூக்கக்கூடிய சக்தி, இரு கைகளின் சக்தி, தளர்வு நிலை, நின்று பாய்தல், வேகம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய பிரிவுகளில் சித்தி பெறுதல் வேண்டும்.

ஈ. வேறு தமைமைகள்

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) சமயம் அல்லது சமய அமைப்பு குருமார்கள் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

(iv) விண்ணப்ப இறுதி நாளன்று மூன்று வருடம் மேல் மாகாணத்தில் வதிவிடத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

(v) தற்போது மத்திய /மாகாண அரச சேவையில் உள்ளவர் எனின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தில் 5 வருட சேவைக் காலத்தில் எச்சரிக்கை பெற்று தண்டனை பெற்றவராக இல்லாதிருப்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட 5 வருட காலத்தில் சகல சம்பள படியேற்றங்களும் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(vi) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக தேவையான மேலே குறிப்பிட்ட சகல தமைமைகள் விண்ணப்பம் கோரும் அரசாங்க வர்த்தமானியில் குறிக்கப்படும் இறுதித் திகதிக்கு சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2 2018.01.01 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04. சேவை நிபந்தனைகள்

4.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகைகளை செலுத்தல் வேண்டும்.

4.2 இப் பதவிக்கு நியமனம் பெறுபவர் குறிப்பிட்ட 03 வருட காலத்திற்குத் தகுதி காண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

4.3 தாபனக் கோவை அத்தியாயம் I தொகுதி II பிரிவு 10 தொடக்கம் 12 வரையான விதிமுறைகள் பதவிக்குரித்தான வகையில் பொருத்தமாகும்.

4.4 சகல அலுவலர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 வது பந்தியிலுள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் அரச கரும மொழி நடைமுறைப்படுத்துதல் தொடர்பான விதிமுறைகளுக்கும் உட்படுவர். மற்றும் காலத்திற்குக் காலம் உருவாக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பதிலளிக்க வேண்டியவராவார்.

4.5 இப் பதவியின் பொருட்டு நியமனம் செய்தல் /பதவி உயர்வு செய்தல் தொடர்பான விதி முறை சட்ட திட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தபான விதிக்கோவைப் பிரமாணங்களுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும் மாகாண ஒழுக்க செயற்பாட்டுப் பிரமாணங்களுக்கும் மாகாண நிதிச்சட்டப் பிரமாணங்களுக்கும் திணைக்கள பணிப்புரைகளுக்கும் மத்திய மற்றும் மாகாண சபைகளுக்கூடாக அறிவுறுத்தப்படும் மற்றும் காலத்துக்குக் காலம் உருவாக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் சகல அலுவலர்களும் பொறுப்பு கூற வேண்டியவராவர்.

4.6 ஆட்சேர்ப்பு செய்யப்படும் அலுவலர் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். மேல்மாகாண சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களுக்கு நியமிக்கப்படும் ஏதாவது ஒரு பிரதேசத்தில் சேவை செய்ய பொறுப்புடையவர்.

05. ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் முறை -
சேவைக்கு ஆட்சேர்ப்பு எழுத்துப் பரீட்சை, நேர்முகத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு மூலம் இடம்பெறும். எழுத்துப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை முடிவின் அடிப்படையில் 40% க்கு அதிகமாக புள்ளி பெறும் விண்ணப்பதாரர்கள் மொத்தப் புள்ளிகளின் வரிசைக்கிரம அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

இதன்படி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பின்னர் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட திறமை அடிப்படையிலான அட்டவணைக்கு உள்வாங்கப்படுவதற்கு விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவகத்தின் அல்லது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் வைத்தியப் பிரிவின் சரீர தகைமை பரிசீலனை சித்தியடைந்திருப்பின் இப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை**

| பாடங்கள் | உயர்ந்த பட்சபுள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|
| 1. நுண்ணறிவு (காலம் : ஒரு மணித்தியாலம்) | 100 | 40% |
| 2. மொழித் தேர்ச்சி (காலம் : ஒரு மணித்தியாலம்) | 100 | 40% |

**எழுத்துப் பரீட்சையின் பாடவிதானம்**

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. நுண்ணறிவு | அபேட்சகரின் பொது அறிவு, தர்க்கத்திறன், கருத்து வெளிப்பாடு, புள்ளி விபர வெளிப்பாட்டுத் திறன், கிரகித்தல் ஆற்றல் என்பன அளவீடு செய்யும் நோக்குடன் இந்த வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 2. மொழித்திறன் | எழுத்துப் பிழை, தீர்க்கமான மற்றும் கருத்து வெளிப்பாடு, மொழிப் பிரயோகம் தொடர்பான அவதானம், சாராம்சம் மற்றும் வசன அமைப்புத் திறன் என்பன எதிர்பார்க்கப்படும். |

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் கிடைக்கக் கூடிய தலைப்புக்கள் | புள்ளி வழங்கும் திட்டம் | உயர்ந்த பட்சபுள்ளி அளவு | |
|---|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித்தகைமை | விளையாட்டுத்துறை டிப்ளோமா (ஒரு வருடம்/அதற்கு மேற்பட்டது) | 15 | |
| | பொதுப்பட்டம் | 07 | |
| | விளையாட்டுத் துறைப் பட்டம் | 10 | 10 |
| 2. விளையாட்டுத் திறன் | ஆட்சேர்ப்புவிதி முறை 7.2.2.2 பிரிவில் குறிப்பிடப்படும் விளையாட்டுப் போட்டி வெற்றி தொடர்பாக மட்டும் இப்புள்ளிகள் வழங்கப்படும். | | 70 |
| 3. விளையாட்டுப் போட்டிக்கு பயிற்சி வழங்கல், நடுவராக செயற்படுதல், போட்டி ஒழுங்கமைப்பு | ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதி முறைகள் 7.2.2.2 பிரிவில் விபரத்தின் படி மாவட்ட மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான போட்டிக்கு பயிற்றுவித்தல்/நடுவராக அல்லது ஒழுங்கமைத்தல் தொடர்பாக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும் (தேசிய அல்லது சர்வதேச விளையாட்டு கழகத்தினூடாக பங்கு பற்றிய சான்றிதழ்/ அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.) | | 15 |
| | மாகாண/மாவட்ட போட்டி | 5 | |
| | தேசிய போட்டி | 7 | |
| | சர்வதேச போட்டி | 10 | |
| 4. ஆளுமை | | | 05 |

தகைமை நிலை நாட்டப்பட்ட சான்றிதழினை மீண்டும் பரிசீலித்தல் மற்றும் சரிபார்த்து நிச்சயப்படுத்தல் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் இடம்பெறும்.

விளையாட்டுத் திறமை தொடர்பாக புள்ளிகள் பெறுவதற்கான முறைமை விளக்கமாக கீழே தரப்படுகின்றது. (உயர்ந்த பட்சத் திறமை தொடர்பாக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்)

| விளையாட்டுப் போட்டி மட்டம் | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| மாகாணப் போட்டி | 20 | 15 | |
| தேசியப் போட்டி | 45 | 42.5 | 40 |
| தெற்காசியப் போட்டி | 55 | 52.5 | 50 |
| ஆசியப் போட்டி, பொது நலவாய போட்டி, சம்பியன் போட்டி 1-2 அல்லது 3 ஆம் நிலைவெற்றிகள் | | 65 | |
| ஆசியப் போட்டி, பொது நலவாயப் போட்டி, உலகப் போட்டி, ஒலிம்பிக் போட்டி 1-2 அல்லது 3 ஆம் இடங்கள் | | 70 | |

06. பரீட்சைக் கட்டணம்

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா மேல் மாகாண கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சில் செலுத்தப்பட்டு பெறப்பட்ட இரசீதினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்டு பெறப்பட்ட இரசிது தவிர வேறு எந்த நிறுவனத்தில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்காக இரசீது, காசுக்கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

07.**விண்ணப்பிக்கும் முறை**

7.1 அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்று A 4 அளவுக் (செ.மீ. 21X29) கடதாசியில் இரு பக்கங்களிலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்**

'செயலாளர், மேல்மாகாண கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சு, இல. 89, 4 வது மாடி, ரண்மகபாய, பத்தரமுல்லை, என்ற விலாசத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "விளையாட்டு அதிகாரி தரம் III தொடர்பான ஆட்சேர்ப்பு - 2018" எனக் குறிப்பிடல் வேண்டும்.

7.2. தற்போது மத்திய /மாகாண, அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தத்தமது திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் ஊடாகவே அனுப்புதல் வேண்டும்.

7.3 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள், குறிப்பிட்ட தினத்திற்கு முதல் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படாத, முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவது, பரீட்சை அறிவுறுத்தலில் குறிப்பிடப்படும் மாதிரிப் படிவத்திற்கேற்ப உள்ளமையை உறுதிப்படுத்துவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை விண்ணப்பதாரியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசனமிக்கதாகும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

08. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 2018.03.29 ஆகும்.

09. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான கடிதக் கோவைகளின் மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சகல விண்ணப்பதார்களின் பதவிக்குப் பொருத்தமான அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் பெறும் இறுதித் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டிருப்பது கட்டாயமானதாகும்.

10. பரீட்சைக்காக விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டையினை வழங்குவது பரீட்சைக்குரிய அடிப்படைத் தகைமையை பூர்த்தி செய்ததாக கருதப்படலாகாது.

11. விண்ணப்பதாரி தகைமையற்றவர் என்பது நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அறியப்பட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். நியமனம் கிடைக்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில், அவ்வாறின்றேல் ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை தெரிந்தே மறைத்திருப்பின் அவர் அரச சேவையிலிருந்து நிறுத்தப்படுவார்.

12. இப்பரீட்சையை நடத்துவதோ அல்லது நடத்தாமல் விடுவதோ அல்லது நடத்திய பின் தெரிவு செய்வது/செய்யாதிருப்பதும் வெற்றிடம் தொடர்பாக இறுதி முடிவும் மேல் மாகாண கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சுக்கு உரியதாகும். யாரேனும் இந்த அறிவித்தலின் விதிமுறைகளை கவனத்திற் கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் அது தொடர்பான இறுதித் தீர்மானம் மேல்மாகாண கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சுக்குரியதாகும்.

செயலாளர்,
மேல்மாகாண கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சு,
இல. 89, 4 வது மாடி,
ரண்மகபாய,
பத்தரமுல்லை.

(இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட நிறுவனங்கள் மூலம் மாற்று முறையில் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும் விண்ணப்பங்களில் குறிப்பிடப்படும் விடயங்களும் விண்ணப்பமும் தொடர்பில் எதுவித பொறுப்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.)

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**மாகாண கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2018**

சுட்டிலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் -2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4 [ ]

1. 1.1. முதல் எழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியதாக பெயர் :- ........................................................................

(ஆங்கில பெரிய எழுத்தில் ) உம் : SILVA. A. B

1.2. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :- ........................................................................

1.3. முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :- ........................................................................

1.4. நிரந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :- ........................................................................

(அனுமதிப்பத்திரம் இம் முகவரிக்கு அனுப்பப்படும்)

1.5. நிரந்தர முகவரி ( சிங்களம்/தமிழ் ) :- ........................................................................

........................................................................

1.6. தொலைபேசி இலக்கம் : - வீடு : ............................ கைத்தொலைபேசி :- ....................................

1.7. நீர் மத்திய அல்லது மாகாண அரச சேவையில் இணைக்கப்பட்டிருந்தால் :

பதவிப் பெயர் : ........................................................................

நியமனத் திகதி : ........................................................................

2. 2.1. பால் (பெண்/ஆண்) : பெண் - 1 ஆண் - 0 [ ]

(பொருத்தமான இலக்கத்தைக் கட்டத்தில் குறிப்பிடுக.)

2.2. விவாகமானவர் /விவாகமாதாவர் : [ ]

விவாகமாகாதவர் -1

விவாகமானவர் - 2

2.3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

3. பிறந்த திகதி :- ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

2018.01.01 ஆந் திகதியன்று : வயது

வருடங்கள் : [ | | | ] மாதங்கள்: [ | ] நாட்கள் : [ | ]

4. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :

க.பொ.த. (சா.த.) பரீட்சை :

வருடம் : .............................................. சுட்டிலக்கம் : ..................................................

முதல் தடவை :

| பாடங்கள் | பெற்ற பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

இரண்டாம் தடவை (தகைமை பூரணப்படுத்துவதற்கான பரீட்சை பற்றிய விபரம் :

| பாடங்கள் | பெற்ற பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க.பொ.த ( உ. த ) பரீட்சை :

ஆண்டு :- ................................... சுட்டெண் :- .........................................

| பாடம் | பெற்ற பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.2. தொழில் தகைமை : .....................................................
.....................................................
.....................................................
(விண்ணப்பப்பத்திரத்துடன் வேறு எந்த சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படக் கூடாது)

05. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு இல. : ..............................

திகதி : .....................................

| பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) ............................................... ஆகிய என்னால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதுமெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் ............................. மற்றும் ............................. ஆந் திகதி கொண்ட பற்றுச் சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் உறுதி கூறுகின்றேன். இப்பரீட்சைக்குரிய சட்ட திட்டங்களுக்கு அமைய நான் தகைமையற்றவன் என பரீட்சைக்கு முன், அல்லது பரீட்சையின் போது அல்லது அதன் பரீட்சையின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும் என்பதற்கு உட்படுவேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக மேல்மாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்பதையும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி :- ................................................ ....................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், அவர் ....................................................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், அவர் குறித்த பரீட்சைக்கான பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

......................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ......................................................

கையொப்பம் : ..................................................

பதவியும் பதவி முத்திரையும் : ..............................................................................

(விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான் சத்தியப் பிரமான ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட் பதவியிலுள்ள அலுவலர் அல்லது ரூபா 571,380 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற மத்திய அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தர பதவியை வகிக்கின்ற அலுவலர் ஆகிய ஒருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்).

மத்திய அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தொடர்பாக பணிபுரியும் திணைக்கள/நிறுவனத் தலைவரின் சிபாரிசு (தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்).

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................ .................................... என்பவர் தற்போது ................................................ அமைச்சில்/ திணைக் களத்தில் /நிறுவனத்தில் சேவையாற்றி வருகிறார் எனவும். அவரது சேவை திருப்திகரமானதொனவும் அவர் அரசாங்க சேவையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளாரா/படவில்லை என்பதையும் பதவியை கைவிட்டுச் சென்ற இவரை கவனத்திற் கொள்ள முடியும்/முடியாது என்பதை சான்றுப்படுத்துவதுடன் இப்பரீட்சையின் முடிவின்படி இவர் நியமனம் தொடர்பாக தெரிவு செய்யப்படுவாரெனின் அவர் /அவளை தற்போது அவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும், சிபார்சு செய்கின்றேன்.

....................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

(பதவி முத்திரை)

திகதி :- ...........................

மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களின்

**நூலகப் பொறுப்பாளர் சேவையின் (III ஆம் வகுப்பு) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2017 இக்கான விண்ணப்பம் கோரல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2047 மற்றும் 2017.11.24 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நூலகப் பொறுப்பாளர் சேவையின் ( III ஆம் வகுப்பு) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 இக்கான விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2018.03.23 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

எச். எம். எம். யூ. பீ. ஹேரத்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

3-431

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.